பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 57

புதன்கிழமை
22 ஜனவரி 2025

தை 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

## காய்ச்சலால் சிறுமி சாவு!

யாழ்ப்பாணம், ஜன. 22
மூன்று நாள்கள் தொடர்ச்சியான காய்ச்சலுக்கு உட்பட்டிருந்த சிறுமியொருவர், சிகிச்சையின்போது பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். 15

வடக்கு மாகாணத்தில்

# 2024 இல் மட்டும் 34 படுகொலைகள்

யாழ்ப்பாணம், ஜனவரி 22
வடக்கு மாகாணத்தில் கடந்த வருடம் 34 படுகொலைகள் இடம்பெற்றுள்ளன என்று வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் தனபால தெரிவித்துள்ளார். 15



## அர்ச்சுனா எம்.பி.யை கைதுசெய்ய உத்தரவு

கொழும்பு, ஜன. 22
நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவை கைதுசெய்யுமாறு அநுராதபுரம் நீதிமன்றம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.
நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா அநுராதபுரம் ரம்பேவ பகுதியில் நேற்றையதினம் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் விளக்குகளை ஒளிரச் செய்து தனது வாகனத்தைச் செலுத்திச் சென்றுள்ளார்.
இதன்போது, போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் 12

## என்னை முடக்கச் சதி: சுமந்திரனை விசாரியுங்கள்

நாடாளுமன்றத்தில் சிறீதரன் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 22
எனக்குப் பயணத்தடை விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில், ஊகத்தின் அடிப்படையில் சுமந்திரன் கருத்துத் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் பேச்சாளர்போல அல்லது அரசாங்க புலனாய்வுத்துறையின் பேச்சாளர்போல அவர் நடந்துகொண்ட விதம் கண்டிக்கத்தக்கது. எனக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இந்தச் சதி தொடர்பில் 15

## பிடியாணை பெற்றவர் பலாலியில் கைதானார்!

யாழ்ப்பாணம், ஜன. 22
இந்தியாவிலிருந்துபலாலி விமான நிலையம் ஊடாக வருகைதந்த நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் 15

வடக்கில் கடந்த வருடம்

## 28 பொலிஸார் பணிநிறுத்தம்!

யாழ்ப்பாணம், ஜன. 22
வடமாகாணத்தில் கடந்த வருடத்தில் மட்டும் ஊழல் மோசடியாலும், இன்னும் பல குற்றச்சாட்டுக்களாலும் 28 பொலிஸார் பணிநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.
2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் 15

## சிறீதரனுக்கு இடையூறு வருந்துகிறதாம் அரசு!

கொழும்பு, ஜன. 22
நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கு விமான நிலையத்தில் ஏற்பட்ட இடையூறு தொடர்பில் வருந்துகின்றோம். இந்தச் சம்பவம் அரசாங்க வழிகாட்டலுடன் இடம்பெற்ற ஒன்றதல்ல என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். 15

## ஜனவரி 31ஆம் திகதி யாழ். வருகிறார் அநுர

யாழ்ப்பாணம், ஜன. 22
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் 31ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை மற்றும் எழுதுமட்டுவாழ் பகுதிகளில் இடம்பெறவுள்ள மக்கள் சந்திப்பில் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளார். அதேபோன்று அன்றையதினம் இடம்பெறவுள்ள யாழ்ப்பாணம் 15

## கிணற்றில் வீசி சிசு கொலை!

தாய் உட்பட மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 22
சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடி தென்கிழக்கு மூர்த்தியாவத்தை கந்தசாமி கோவில் பகுதியில் உள்ள தோட்டக்கிணற்றிலிருந்து பச்சிளம் சிசுவொன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளது. 12

## பெப்ரவரி 8 தமிழரசின் மத்தியகுழு

யாழ்ப்பாணம், ஜன. 22
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி மட்டக்களப்பில் இடம்பெற 15



## வடக்கு மாகாணத்தில் 5 முதலீட்டு வலயங்கள்

அமைச்சர் விஜித ஹேரத் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 22
வடமாகாணத்தில் ஐந்து புதிய முதலீட்டு வலயங்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்குப் பொருத்தமான இடங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று வெளி 15




'வடக்கில பொழியிற பாசமழையை பாக்க நெஞ்சு படக்கு படக்கெண்டு அடிக்குது கண்டியளோ'

## வடக்கின் அபிவிருத்தியில் அரசாங்கம் அதிக கவனம்

ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, ஜனவரி 22
வடமாகாணத்தின் அபிவிருத்திப் பணிகளில் அரசாங்கம் அதிக கவனத்துடனும், அக்கறையுடனும் செயற்படுகின்றது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கும் இடையில் ஜனாதிபதியின் 15

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2025
15th JAFFNA INTERNATIONAL TRADE FAIR
JANUARY ஜனவரி
24 25 26
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds (Next to Jaffna Fort)
முற்றவெளி மைதானம்
இன்னும் 2 நாட்களில்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION

மக்கள் ம... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் நம்பிக்கையை சிதைக்காமல் பயணிப்போம்

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, ஜன.22

**இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக அரசியல் கலாசாரத்தில் புதிய திருப்பம் ஆரம்பமாகியுள்ளது. மக்கள் எம் மீது வைத்துள்ள நம்பிக்கையைச் சிதைப்பதற்கு இடமளிக்காமல் அந்த நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தி முன்னோக்கிப் பயணிக்க உள்ளோம்.**

இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். பேருவளையில் நடந்த கட்சிக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பொருளாதாரத்தில் வீழ்ந்த நாட்டையே மக்கள் எமக்கு கையளித்தனர். நாம் பொறுப்பேற்கும் போது அதன் பாரதூரத்தை அறிந்திருந்தோம். நாம் அரசாங்கத்தின் செலவுகளைக்குறைத்துள்ளோம். குறைந்த செலவுகளுடன் கூடிய பட்டியல் கொண்ட வரவு செலவுத் திட்டத்தை நாம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்போம்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும். அனைத்துப் பக்கங்களிலும் இருந்து நாம் சில அர்பணிப்புகளைச் செய்யவேண்டும். ஆனாலும் நாட்டு மக்களைக் கவனிக்கவேண்டும். மக்களை நெருக்கடிக்குள் தள்ளமுடியாது. அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவேண்டும்.

நாடு என்ற வகையில் மீண்டும் மீண்டெழும் யுகத்தில் இருக்கிறோம். ஆனால் அதைப் பார்த்து சிலர் தினறுகிறார்கள். எதையாவது ஒன்றைக் கூறிக்கொண்டு புலம்பிக்கொண்டிருக்கிறார்கள். அதை எவரும் பொருட்படுத்த வேண்டாம் - என்றார். (எ-இ)



# எம்.பி.களுக்கு வாகனங்கள்

## விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.22

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஐந்து வருடங்களுக்கு வாகனமொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமது பணிகளை முன்னெடுப்பதற்காக ஆளும் மற்றும் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனமொன்று பெற்றுக்கொடுக்கப்படும்.

இனிவரும் காலங்களில் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படாது. உரிய நடைமுறைகளின் அடிப்படையிலேயே இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். அந்தவகையில் ஐந்து வருடங்களுக்குப் பிறகு வாகனத்தை மீள ஒப்படைக்கலாம். அவ்வாறு இல்லாவிட்டால் அக்காலப்பகுதிக்குரிய கட்டணத்தைச் செலுத்திவிட்டு வாகனத்தை சொந்தமாக்கிக்கொள்ளலாம். - என்றார். (ச-44)

கொழும்பு போர்ட் சிற்றியில்

# பிரமாண்ட மண்டபம் சீனா நிர்மாணம்

கொழும்பு, ஜன.22

பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தைவிட பெரிய மகாநாட்டு மண்டபமொன்றை கொழும்பு போர்ட் சிற்றியில் சீனா நிர்மாணித்து வழங்கவுள்ளது.

இந்த மண்டபத்தில் சர்வதேச மகாநாடுகள், வர்த்தகக் கண்காட்சிகள் என்பவற்றை நடத்த முடியுமென ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி மேற்கொண்ட சீன விஜயத்தின்போது இந்தத் திட்டங்களுக்கான இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

# கூட்டுறவுத் தேர்தலுடன் ஆட்டம் காண்கிறது அரசு

## உதய கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 22

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வீழ்ச்சிப்பயணம் ஆரம்பமாகியுள்ளது என்பதையே கூட்டுறவுத் தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

மக்களை உசுப்பேற்றியே தேசிய மக்கள் சக்தி ஆட்சியைக் கைப்பற்றியது. தற்போதும் அவ்வாறு செய்வதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கின்றது. சிலரை ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லா நாள்களும் ஏமாற்றிவிடமுடியாது.

எனவே, பொய்யான வாக்குறுதிகளை அள்ளி வீச முற்படுவதை தற்போதாவது தேசிய மக்கள் சக்தி கைவிடவேண்டும்.

தேசிய மக்கள் சக்தி இரு மாதங்களுக்குள்ளேயே கூட்டுறவுத் தேர்தலில் மண்கவ்வியுள்ளது. அரசாங்கத்தின் வீழ்ச்சிப்பயணம் ஆரம்பமாகியுள்ளது என்பதையே இது எடுத்துகாட்டுகின்றது. எனவே வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றினால் மாத்திரமே இதைத் தடுக்கமுடியும். -என்றார். (ச-25, 33, 44)

# நாய்கள் குரைத்தால் நட்டம் எமக்கில்லை!

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

கொழும்பு , ஜன. 22

நாய்கள் குரைக்கத்தான் செய்யும். அதைப்பற்றி நாங்கள் கவலைப்படத் தேவையில்லை. கடிக்க வந்தால் ஒரு கல்லை எடுத்து வீசி விட்டுப் போக வேண்டியதுதான் என்று தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சியினரின் விமர்சனங்களால் எமக்கு பாதிப்பு ஏற்படாது. மக்களின் ஆணைக்கமைய நாம் எமது கொள்கையில் பயணிக்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-22,6)



# ஊழல் மோசடிகளுக்கு தனி நீதிமன்றம் தேவை

யாழ்ப்பாணம், ஜன.22

இலஞ்ச ஊழல் மோசடி தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு விசேட நீதிமன்றம் அமைக்க வேண்டுமென தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம், புலனாய்வுத்துறை போன்றவற்றுக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டு ஊழல் மோசடி தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென தனியான நீதிமன்றம் அமைக்கபட்டால் ஊழல் நடவடிக்கைகளுக்கு விரைவில் தீர்வு காணலாம் என்றும் குறிப்பிட்டார். (ச-6)

**சுபிரி தன சம்பத** — DLB

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 21.01.2025 | செவ்வாய்க்கிழமை | 0431 | U | 3 5 7 7 8 1 |

**Super Ball** — DLB

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 21.01.2025 | செவ்வாய்க்கிழமை | 2697 | F | 19 24 46 68 |

**சனிதா** — DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 21.01.2025 | செவ்வாய்க்கிழமை | P | 13 14 31 54 | 4858 |

**SASIRI** — DLB

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 21.01.2025 | செவ்வாய்க்கிழமை | 0605 | 03 24 31 |

**லக்ன ராசி** — DLB

| திகதி | தினம் | ராசி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 21.01.2025 | செவ்வாய்க்கிழமை | தனுசு | 29 45 51 57 | 4409 |

**KAPRUKA** — DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 21.01.2025 | செவ்வாய்க்கிழமை | X | 28 | 08 49 52 70 | 1873 |

**அத கோடிபதி** — DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 21.01.2025 | செவ்வாய்க்கிழமை | P | 18 37 46 61 | 2523 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறைக் கடலில் கடற்படை சூட்டுப்பயிற்சி

## மீனவர்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 22

வடக்குப் பிராந்திய இலங்கைக் கடற்படையினர் எதிர்வரும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமையும் திங்கட்கிழமையும் காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை பருத்தித்துறைக் கடலில் சூட்டுப் பயிற்சியில் ஈடுபடவுள்ளனரென்பதால் மீனவர்களை குறித்த பகுதிக்குள் பிர வேசிக்க வேண்டாமென அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கரையோரக் கடற்படையின் வடக்குப் பிராந்தியப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்களம் ஊடாக அனைத்துக் கடற்றொழில் சங்கங்களுக்கும் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். (ச-27)



## குடும்பத்தலைவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன. 12

நெடுந்தீவில் குடும்பத்தலைவர் ஒருவர் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-125)



## பாரவூர்தி விபத்து இருவர் காயம்

வவுனியா, ஜன. 22

ஏ-9 வீதியில் இடம்பெற்ற பாரவூர்தி விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர் என்று மதவாச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஏ-9 வீதி மதவாச்சி, களுகந்தே பகுதியில் நேற்றுக் காலை மூன்று பாரவூர்திகள் தரித்துநின்றபோது கொழும்பில் இருந்து பயணித்த பாரவூர்தியொன்று அவற்றுடன் மோதியதிலேயே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-110)

## மணல் கடத்தல் சிக்கியது டிப்பர்

அனுமதிப்பத்திரமில்லாமல் கிளாலிப் பகுதியில் இருந்து வெள்ளை மணல் கடத்தி வந்த டிப்பர் ஒன்று மடக்கிப் பிடிக்கப்பட்டு அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார். சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. சந்தேகநபரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்து வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-27)

## போலிக் கடவுச்சீட்டுடன் ஆப்கானியர் கைது!

போலிக் கடவுச்சீட்டுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கிய இரண்டு ஆப்கானியர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் குவைத்திலிருந்து கசகஸ்தான் கடவுச்சீட்டுடன் வந்திறங்கியுள்ளனர். இவர்களது கடவுச்சீட்டுகளைப் பரிசோதித்த குடிவரவு அதிகாரிகள் சமர்ப்பிக்கப்பட்ட கடவுச்சீட்டுகள் இரண்டும் போலியானவை என்பதை கண்டுபிடித்ததையடுத்து இருவரும் அவர்கள் பயணம் செய்த விமானத்திலேயே குவைத்துக்கு திருப்பியனுப்பப்பட்டனர். (ச-22,6)

## அரச இல்லங்கள் அரசு மதிப்பாய்வு

கொழும்பு, ஜன. 22

முன்னாள் ஜனாதிபதிகள் வசிக்கும் உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பான மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வசிக்கும் தற்போதைய இல்லத்தில் கடந்த வாரம் மதிப்பீட்டுத் திணைக்களம் ஆய்வொன்றை மேற்கொண்டிருந்தது.

அதேபோன்று ஏனைய முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா குமாரதுங்க , மைத்திரிபால சிறிசேன , கோத்தாபய ராஜபக்ச மற்றும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் துணைவியார் ஹேமா பிரேமதாச ஆகியோர் வசிக்கும் இல்லங்கள் குறித்தும் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலமாக ஆய்வொன்றை நடத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது. (ச-இ)

# இலங்கையரின் ஆதரவின்றி ரோஹிங்யரால் வரமுடியாது

## பொதுப்பாதுகாப்பு அமைச்சர் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன.22

இலங்கையிலுள்ள ஒரு தரப்பினரின் ஆதரவு இல்லாமல் ரோஹிங்ய முஸ்லிம்கள் நாட்டினுள் வரமாட்டார்கள் என பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு ஆதரவு வழங்கும் தரப்பினர் யார் என்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது. மேலும் ஒரு இலட்சம் சட்டவிரோதக் குடியேறிகள் நாட்டுக்குள் நுழைவதற்கு தயாராகிவருகின்றனர் எனக் கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கமைய கடற்படையினர் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-6)




தலையள் சும்மா இருந்தாலும் உந்த வாலுகளின்ர ஆட்டத்தால கெட்டபேர் வருமெண்டால், அமைச்சர்மாருக்கு கெட்டபேர் வந்தால் கோபம் வரும் தானே. அப்பிடி ஒரு சம்பவம் யாழ்ப்பாணத்தில இருக்கிற பிரதேச சபை ஒண்டில நடந்திருக்குது. ஒரேயொரு தீவில ஒரேயொரு பிரதேச சபையாம். அங்க பேமஸான 'பீச்' ஒண்டும் இருக்கும். வெளிநாட்டுக்காரரும், உள்நாட்டுக்காரரும் அந்த 'பீச்சுக்கு' படையெடுக்கிறதால, அவை குளிக்கிறதுக்கு அறையளும், நடைபாதையும் கட்டுற வேலை ரண்டு மூண்டு வருசத்துக்கு முதல் தொடங்கினது. நடைபாதை போன வருசமே கட்டிமுடிஞ்சாலும், குளியலறை வேலை நாலைஞ்சு மாதத்துக்கு முதல்தான் முடிஞ்சிருக்கு. இந்தக் குளியலறை கட்டுப்படுறதுக்கும் திசைகாட்டிக்காரருக்கும் எப்பனும் தொடர்பில்லை. ஐரோப்பிய யூனியன்ர அனுசரணையோட உலக வங்கிதான் இதைக் கட்டிக் குடுத்தது. எண்டாலும், இப்ப ஆட்சியில இருக்கிறவை எண்டதுக்காக கடற்றொழில் அமைச்சரைக் கூப்பிட்டு கிட்டடியில் குளியலறையளையும், நடைபாதையையும் திறந்துவைச்சவை.

இதிலயென்ன பிரச்சினை இருக்கு எண்டு ஆரும் யோசிப்பியள். பிரச்சினை இருக்கு. வழித் தேங்காயை எடுத்து தெருப்பிள்ளையாருக்கு அடிச்ச கணக்கில, 11 கோடியில கட்டுப்பட்ட உந்த குளியலறையளுக்கும், நடைபாதைக்கும் செய்த திறப்புவிழாவில தமிழ், சிங்களம், இங்கிலிஷ் எண்டு மூண்டுமொழியிலயும் மூண்டு கல்வெட்டு செய்து, அதைத்தான் திரைநீக்கமும் செய்தவை. ஒரு கல்வெட்டுச் செய்யவே 80 ஆயிரத்துக்கும் மேல முடியும். இந்த விலையில ஒரு கல்வெட்டில மூண்டு மொழியிலையும் விசயத்தை உள்ளடக்கியிருக்கலாம். 'கிட்டத்தட்ட ரண்டரை லட்சம் ரூபாவுக்கு உப்பிடி மூண்டு மொழிக்கும் தனித்தனியா மூண்டு கல்வெட்டு அடிச்சு காசை அநியாயமாக்கவேணுமோ?' எண்டு அந்தப் பிரதேச சபையின்ர செயலாளருக்கு அங்கேயே வைச்சு அமைச்சர் கடும் டோஸ் குடுத்திருக்கிறார்.

ஏனெண்டால் அந்தச் செயலாளர் தனக்கு இடமாற்றம் வரமால் இருக்கத்தான் அவசரமா உந்தக் குளியலறையளை அமைச்சரைக் கொண்டு திறந்துவைச்சவர் எண்டும் ஒரு கதை அடிபடுகுது. அதை எண்பிக்கிறமாதிரி மூண்டு கல்வெட்டிலையும் அமைச்சரின்ர பேரையும் தன்ர பேரையும் அந்தப் பிரதேசசபைச் செயலாளர் பெரிசாப் பொறிச்சிருக்கிறார். இப்பிடி அமைச்சருக்கு மூண்டு கல்வெட்டில பேரைப் பொறிச்சால் அவர் அந்த ஐஸில உச்சி குளிர்ந்து தனக்கு இடமாற்றம் வராமல் காப்பாத்துவார் எண்டு அந்தசெயலாளர் நினைச்சிருக்கிறார் போல. ஆனால் நல்லவேளையா அமைச்சர் அந்த இடத்திலேயே உசாராகிப் பேசினதால, 'என் ராஜதந்திரங்கள் எல்லாம் வீணாகிவிட்டனவே' எண்டு இம்சை அரசன் மாதிரி புலம்பிக்கொண்டிருக்கிறாராம் அந்தச் செயலாளர்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாளாக இருக்கும். மன உறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உங்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்வார்கள். ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**இடபம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். சிலருக்கு எதிர் பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாயின் விருப்பத்தை பூர்த்திசெய்வீர்கள்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்பட்டாலும் அவசியமான செலவு களாகவே இருக்கும். சிலருக்கு விருந்து விசேடங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு உண்டாகும்.

**கடகம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். இளைய சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக் கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**கன்னி:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

**துலாம்:** எதிலும் நிதானமாக செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்படும். ஆனாலும், உற்சாகத்துக்குக் குறைவிருக்காது.

**தனுசு:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவையை நிறைவேற்றி மகிழும் வாய்ப்பு உண்டாகும். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**மகரம்:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். முடிந்தவரை அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்.

**கும்பம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக் கூடும்.

**மீனம்:** தாய்வழி உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு சுமாராகத்தான் இருக்கும்.

# மறுவாழ்வு மையத்துக்கு யாழிலிருந்து மூவர்

யாழ்ப்பாணம், ஜன.22

யாழ்.மாவட்டத்தில் நீண்டகாலத்தின் பின்னர் ஒரே தடவையில் மூன்று இளைஞர்கள் போதைப்பொருள் மறுவாழ்வுக்காக கந்தக்காடு புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.


மானிப்பாய் பொலிஸாரால் அண்மையில் கைதுசெய்யப்பட்ட மூன்று இளைஞர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளில் அவர்கள் ஹெரோய்னுக்கு அடிமையானவர்கள் எனத் தெரியவந்தது. அதனையடுத்து அவர்கள் மூவரையும் மறுவாழ்வு மையத்துக்கு அனுப்புமாறு நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-125)

# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன. 22

வட்டுக்கோட்டை உடுக்கியவளை ஸ்ரீமஹா கணபதிப்பிள்ளையார் திருக்கோவில் நவவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் விசேட நிகழ்வாக வழக்கம் பரையூர் ஈழத்தின் புகழ்பூத்த நாதஸ்வர வித்துவான் "சுரநாத திலகம்" இ.சிவகுமார் குழுவினரின் நாதஸ்வர இசை இடம்பெறவுள்ளது என்று ஆலய தர்ம கர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-25 )



# கரவெட்டி மத்தியஸ்தசபை பணிகள் மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.22

கரவெட்டி மத்தியஸ்தசபையின் பணிகள் ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிகள் 5 ஆவது ஞாயிற்றுக்கிழமையை தவிர ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வழமை போன்று யாழ். அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறும் என சபையின் தவிசாளர் சி. நற்குணலிங்கம் தெரிவித்துள்ளார். (ச-41)

# யாழில் மகாயாகம்; கதிர்காமத்தில் பிரதிஷ்டை

யாழ்ப்பாணம், ஜன. 22

கதிர்காமத்தில் பிரதிஷ்டை செய்வதற்காக இந்தியாவிலிருந்து எடுத்துவரப்பட்ட சுப்ரமணியன் சமேத கயாவல்லி மகாவல்லி விக்கிரகத்துக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாவிட்டபுர கந்தன் ஆலயத்தில் விசேட மகாயாகம் இடம்பெற்றது.

இந்தியாவின் திருச்செந்தூரிலிருந்து குறித்த விக்கிரகம் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்துக்கு எடுத்துவரப்பட்டது.

இங்கு யாழ்ப்பாணத்தில் உள்ள பிரசித்திபெற்ற முருகன் ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து தலைநகர் கொழும்புக்கு முருகப்பெருமான் எடுத்துச் செல்லப்பட்டு கொழும்பிலிருந்து கதிர்காமம் வரையிலான முருகன் ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து எதிர்வரும் மார்ச் மாதம் கதிர்காமத்தில் சுப்பிரமணியன் சமேதராக பிரதிஷ்டை செய்யப்படவுள்ளார். (ச-25, 27)

# நடை பாதை வியாபாரம்; பொலிஸார் அறிவுறுத்து


யாழ்ப்பாணம், ஜன.22

யாழ்.நகரில் போக்குவரத்துக்கு இடையூறாக வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக நடைபாதையில் பொருள்களை வைத்து விற்பனை செய்வதைத் தவிர்க்குமாறு பொலிஸார் அறிவுறுத்திவருகின்றனர்.

'க்ளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தின் கீழ் நடைபாதைகளில் பொருள்களை வைத்து விற்பனை செய்வதும் அவற்றைக் காட்சிப்படுத்துவதும் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ச-17)



யாழ். மாவட்டப் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்களின் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சந்திரமோகனால் கடந்த சனிக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. (ச-41-17)



கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் நடத்திய தைப்பொங்கல் விழா அண்மையில் வித்தியாலய வளாகத்தில் சிறப்பாக இடம்பெற்றது. (ச-40-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகைப் பரிசோதனை

நெடுந்தீவு, ஜன. 22
நெடுந்தீவு பிரதேசெயலகப் பிரிவில், பாவனையில் உள்ள வாகனங்களுக்கான புகைப் பரிசோதனை பிரதேச செயலக வளாகத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெறும் எனப் பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-25,9)





## '5 எஸ்' சான்றிதழ் பெற்றது கிளி. மாவட்டச் செயலகம்

கிளிநொச்சி, ஜன. 22
தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நடத்தப்பட்ட 5 எஸ் தரச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போது 5 எஸ் தரச் சான்றிதழினை கிளிநொச்சி மாவட்டச் செயலகம் பெற்றுக் கொண்டது. (ச-25, 113)

வலைப்பந்தாட்டப்போட்டி

## வெற்றியீட்டிய அணி கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.22
அரச உத்தியோகத்தர்கள் வலைப்பந்தாட்ட சங்கத்தால் யாழ்.மாவட்ட அரச உத்தியோகத்தர்களிடையே நடத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்ற அணிக்கான கௌரவிப்பு நிகழ்வு யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இதன் போது தேசிய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் 2 ஆம் இடத்தைப் பெற்ற 40 வயதுக்குட்பட்ட பெண்கள் மற்றும் ஆண்கள் அணிகளே கௌரவிக்கப்பட்டன. (ச-41-125)

## யாழ். கலாசார மத்திய நிலையம் அமைப்பதற்கு இனிச் சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், ஜன.22
யாழ்ப்பாணக் கலாசார மத்திய நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு தற்போது சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்று மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் கிருஷ்ணகுமார் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
யாழ்.நகரில் ஒரேபெயரில் இரண்டு கலாசார மத்திய நிலையங்கள் அல்லது மத்திய மையங்கள் இருக்கமுடியாது. இந்திய அரசினால் நிர்மாணிக்கப்பட்ட கலாசார மத்திய நிலையம் தற்போது திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையம் எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது.
அதனையடுத்து யாழ்ப்பாணக் கலாசார மத்திய நிலையம் நிர்மாணிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்த மையம் யாழ்ப்பாணத்தின் தனித்துவமான அடையாளத்தைப் பாதுகாக்கும் என்பதில் ஐயமில்லை. இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன - என்றார். (ச-66)



## யாழ்.மத்தியிலிருந்து எம்மை அகற்றாதீர்!

பழவியாபாரிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.22
இலங்கைப் போக்குவரத்துசபையின் யாழ்.மத்திய பேருந்து நிலையத்திலிருந்து எமது வாழ்வாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு எம்மை அகற்ற வேண்டாம் என்று யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் கடைகளை அமைத்துள்ள வியாபாரிகள் கோரிக்கை விடுத்தனர்.
யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் ஊடக சந்திப்பொன்றை நடத்தி அவர் மேலும் தெரிவிக்கையில்,
பேருந்து நிலைய வளாகத்தில் எமது வாழ்வாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு கடைகளை அமைத்து நாம் தொழிலில் ஈடுபட்டு வருகின்றோம். 15 வருடங்களுக்கு மேலாக இந்தத் தொழிலை நம்பியே எமது வாழ்வாதாரம் இடம்பெறுகிறது. பல்வேறு கடன்களைப் பெற்றே சிறு முதலீட்டுடன் இந்தத் தொழிலை நடத்துகின்றோம்.
மாநகரசபை தற்போது இ.போ.ச யாழ். சாலை முகாமையாளரூடாக 14 நாள்களுக்குள் எம்மை வெளியேறுமாறு கடிதம் வழங்கியுள்ளது.
கொரோனாவால் பாதிக்கப்பட்ட நாம் இப்பொழுதுதான் மீண்டு வருகின்றோம். ஆகவே இதனைக் கருத்திற்கொண்டு ஆளுநர் இந்தத் தீர்மானத்தில் கரிசனைகொள்ளவேண்டும் - என்றனர். (ச-125)



## கசூரினா மையத்துக்கு உட்கட்டுமான வசதிகள்

யாழ்ப்பாணம், ஜன.22
உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன், உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் செயற்படுத்தப்பட்டு அமைக்கப்பட்ட கசூரினா சுற்றுலா மையத்துக்கான உட்கட்டுமான வசதிகள் திறப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. காரைநகர்ப் பிரதேச சபையின் செயலாளர் கிருஷ்ணானந்தம் விஜயேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கலந்துகொண்டார். (ச-27)

## வல்வெட்டித்துறையில் நேற்றும் ஒரு மிதவை

யாழ்ப்பாணம், ஜன.22
வடமராட்சி பருத்தித்துறை, ஆதிகோவிலடி கடற்கரையில் மிதவை ஒன்று நேற்றுக் கரையொதுங்கியுள்ளது.
அண்மைக்காலமாக வடமராட்சி கிழக்கின் பல பகுதிகளிலும் மிதக்கும் கூடாரங்கள், மிதவைகள் போன்றன கரையொதுங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-27-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில்

## உணவகம், அங்காடிக்கு 267,000 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், ஜன. 22
நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்காத உணவகம் மற்றும் பூட்சிற்றி உரிமையாளர்களுக்கு 2 இலட்சத்து 67 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி பொதுச் சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவன் தலைமையிலான குழுவினரால் அண்மையில் திருநெல்வேலிப் பகுதியில் திடீர்ப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது காலாவதியான பொருள்கள், சுட்டுத் துண்டு இன்றிய பொருள்கள் என்பவற்றை விற்பனைக்கு வைத்திருந்த உணவகம் மற்றும் பூட்சிற்றி ஆகியவை கண்டறியப்பட்டன.

இரு வியாபார நிலைய உரிமையாளர்களுக்கும் எதிராக வழக்குப் பதிவுசெய்யப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் யாழ். மேலதிக நீதிவான் செ. லெனின்குமார் தலைமையில் குறித்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது உணவக, பூட்சிற்றி உரிமையாளர்களுக்கு முறையே 120,000 ரூபாவும், 147,000 ரூபாவும் தண்டம் விதித்து நீதிவான் தீர்ப்பளித்தார். (ச-26)

## வீட்டில் நகை திருட்டு; உறவினர் கைதானார்

கிளிநொச்சி, ஜன. 22
வீடொன்றில் நகையைத் திருடிய குற்றச்சாட்டில் வீட்டு உரிமையாளரின் உறவினர் ஒருவர் இராமநாதபுரம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். வீட்டில் எவரும் இல்லாத சமயத்தில் வீட்டில் இருந்த பன்னிரெண்டரைப் பவுண் தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய விசாரணை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் வீட்டின் உரிமையாளரின் உறவினர் ஒருவரை கைதுசெய்ததுடன் அவரிடமிருந்து 8 பவுண் தங்க நகைகளை மீட்டுள்ளனர். சந்தேகநபரை கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தியபோது எதிர்வரும் 14 நாள்கள் தடுப்புக்காவலில் வைத்து விசார ணைக்குட்படுத்துமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-25, 113)

## திக்கம் வடிசாலையில் முன்னாயத்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 22
திக்கம் வடிசாலையின் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்கவுள்ள நிலையில் அது தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் திக்கம் வடிசாலையில் கடந்தவாரம் இடம்பெற்றது.

கூட்டத்தில் பெருந்தோட்டப் பிரதி அமைச்சர் எஸ். பிரதீப், கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், யாழ். மாவட்டச்செயலர் ம.பிரதீபன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சந்திரசேகரன், வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் கே. திருலிங்கநாதன், பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் லி. சகாதேவன் உட்பட பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பொதுமுகாமையா ளர்கள் கலந்துகொண்டனர். (ச-25, 41, 17)



## சட்டங்களைப் பின்பற்றுவதில் வட மாகாணம் பின்னடைவு

ஒழுங்கமைக்க வேண்டுமென
வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜன.22**
**வடக்கு மாகாணத்தில் சட்டம் மற்றும் ஒழுங்குகளை பொதுமக்கள் முறையாகப் பின்பற்றுவது இல்லை. 'க்ளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தின் மூலம் இதனை மாற்றியமைக்க வேண்டும் என்று வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் தனபால தெரிவித்துள்ளார்.**

வேலணை மத்திய கல்லூரியில் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;
'தூய இலங்கை' என்னும் கோட்பாட்டின் கீழ் விசேட திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகின்றது. அதற்கேற்ப பாடசாலை மாணவர்கள், பெற்றோர், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகிய அனைவரும் நீங்கள் இணைந்து ஒரு சேவையை முன்னெடுப்பதற்கு இந்தத் திட்டம் சிறந்த முன்னு தாரணம். வடக்கு மக்கள் சட்டத்தை மதித்து நடப்பதாகத் தெரியவில்லை. ஆகவே இந்த ஒழுங்குகள் வடக்கு மாகணத்தில் பேணப்பட வேண்டும். குறிப்பாக வடமாகாணத்திலே வீதி ஒழுங்குகள் பேணப்பட வேண்டிய ஒன்றாகும் ஒழுக்கம் நிறைந்த நாடாக இலங்கையை அடையாளப்படுத்த நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்- என்றார். (ச-125)



## தமிழரசுக் கட்சியின் காரைநகர் கிளைக் கூட்டம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காரைநகர் பிரதான கிளைக் கூட்டம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைநகர் கிளைத் தலைவர் க. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எதிர்வரும் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் இன ஒற்றுமையுடன் எவ்வாறு வேட்பாளர்களைப் பெயரிடுவது என்றும் அந்த முன்மாதிரியை கட்சி உயர்பீடங்களுக்கு அறிவிப்பது என்றும் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது. (ச- 25,125)

யாழில் சுகாதார விதிமீறல்:

## 5 வர்த்தக நிலையங்களுக்கு 1,80 000 ரூபா தண்டம்

யாழ். மாநகரப் பிரதேசத்துக்குட்பட்ட பகுதியில் சுகாதார விதிமுறைகளை மீறிய குற்றத்தில் 5 வர்த்தக நிலையங்களுக்கு தலா ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் கீழ் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் கடந்த வாரம் திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டனர். இதன்போது சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய 5 வர்த்தக நிலையங்கள் வண்ணார்ப்பண்ணை, அரியாலை, நாவாந்துறை ஆகிய பகுதிகளில் கண்டறியப்பட்டன. குறித்த வர்த்தக நிலையங்களுக்கு எதிராக செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ். நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது வர்த்தக நிலைய உரிமையாளர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 5 வர்த்தக நிலையங்களுக்கும் தலா ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (ச-25, 17)

## சிறப்புற நடைபெற்ற காரைநகர்ப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜன.22
பிரித்தானிய காரைநகர் நலன்புரிச்சங்கத்தின் அனுசரணையில் பல்வேறு பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் காரைநகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பயிற்சிப்பட்டறை இடம்பெற்றது.

'காரைநகர் மக்கள் மீள காரைநகருக்கு திரும்ப வேண்டும்' என்ற பிரதான கருதுகோளை அடிப்படையாகக் கொண்டு ஊரின் கலை மற்றும் பாரம்பரியம், விவசாய வளர்ச்சி, நீர் மேலாண்மை, பொருளாதார முன்னேற்றம், தொழில்நுட்பம் தொடர்பான பல விடயங்கள் நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டு அவை தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

தமிழர் பாரம்பரிய நிகழ்வுகளை முன்னிலைப்படுத்தும் நோக்கில் ஒடியல் கூழ் மற்றும் சிறுதானிய உணவுகள் மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. நிகழ்வின் இறுதியில் காரைநகர் பட்டறை நிகழ்வை முன்னிட்டு நடத்தப்பட்ட நீச்சல் போட்டி, கட்டுமரம், கபடி, கிளித்தட்டு மற்றும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளிலும் சதுரங்கப் போட்டி கட்டுரைப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன. (எ-22,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# காலம் கடத்தும் அரசு

புதிய சட்டம் நிறைவேற்றப்படும்வரையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறையில் இருக்கும் ' என்று அரசாங்கத்தின் முக்கியஸ்தரும் அமைச்சரும் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்திருக்கின்றார். நாடாளுமன்றத்தில் அவர் இந்தத் தகவலை நேற்று வெளியிட்டிருந்தார்.

பல தசாப்தங்களாக இலங்கையில் நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் கடுமையாக அதிகாரத் துஷ்பிரயோகத்துக்கு வழியேற்படுத்தியிருந்தது. இந்தச் சட்டம் நாட்டின் சிறுபான்மையின மக்களான தமிழ் மக்கள் மீதே ஈவு இரக்கம் இன்றி 30 ஆண்டுகளுக்கும் மேலாகப் பிரயோகிக்கப்பட்டிருந்தது. இந்தச் சட்டத்தால் தமிழ் மக்கள் அனுபவித்த இன்னல்கள், கொடுமைகள் சொல்லமுடியாதவை. இந்தச் சட்டத்தின் கீழ் கேட்டுக் கேள்வியின்றி எவ்வித அடிப்படைகளும் இன்றிக் கைது செய்யப்பட்ட தமிழர்கள் இப்போதுகூட எவ்வித விசாரணைகளும் இன்றிச் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கின்றார்கள். அல்லது பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி குற்றங்களில் தொடர்புபடுத்தப்பட்டுத் தண்டனைக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள். சர்வதேச சட்டங்களுக்கு ஒவ்வாத -மனித உரிமைகளை நசுக்குகின்ற பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு எவ்வித விசாரணைகளும் இன்றி சிறைகளில் அடைக்கப்பட்டிருப்பவர்கள் விடுவிக்கப்படவேண்டும் என்பது தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கை. இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களின் இந்தக் கோரிக்கையை நிராகரித்ததோடு மட்டுமல்லாது, போர் முடிவுக்கு வந்தபின்னரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களை அச்சுறுத்தி அடக்கும் செயற்பாட்டையே முன்னெடுத்திருந்தன.

தற்போது ஆட்சிக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாதொழிப்போம் என்று உறுதியளித்திருந்தது. ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றியும், அதன்பின்னர் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றப் பெரும்பான்மையுடன் பெற்றுக்கொண்ட வெற்றியும், அவர்களின் உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கான தடைகளை இல்லாது செய்திருக்கின்றன. ஆனாலும் ஆட்சிக்கு வந்ததும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாதொழிப்போம் என்று கூறியிருந்த தேசிய மக்கள் சக்தி, இப்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் நகர்வை ஆறப்போட்டிருக்கின்றது. புதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்வரையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என்ற அரசாங்கத்தின் கூற்று பூசி மெழுகும் செயற்பாடு என்றே கருதவேண்டியிருக்கின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகளை விரைவாக ஆரம்பிப்பதே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செய்ய வேண்டியது. ஆனால் அதற்கான எந்தவொரு முனைப்பையும் காட்டாது - எவ்விதமான செயற்பாடுகளையும் ஆரம்பிக்காது, வெறுமேன புதிய சட்டம் வந்தவுடன் பழைய சட்டம் இல்லாதுபோகும் என்று கூறுவது சாக்குப் போக்குக்கூறி காலத்தைக் கடத்தும் செயற்பாடு என்றே கருதவேண்டியிருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் மக்களுக்கு உறுதியளித்த விடயங்களை நிறைவேற்றுவதற்கு முனைப்புக்காட்ட வேண்டும். புதிய சட்டம் உருவாக்கப்பட்ட பின்னரே தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் என்றால் புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை விரைவில் ஆரம்பிக்கவேண்டும். புதிதாக உருவாக்கப்படும் சட்டம் தொடர்பான கலந்துரையாடல்களை ஆரம்பிக்கவேண்டும். நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் நசுக்கப்பட்டிருக்கும் நாட்டின் சிறுபான்மை மக்களுக்கு, புதிய சட்டம் தொடர்பான தெளிவுகளை வழங்கி, அவர்களின் கருத்துகளை உள்வாங்க வேண்டும். புதிய சட்டத்தை உருவாக்கும் காலத்தை வரையறுக்க வேண்டும். இவை எதையும் செய்யாது வெறுமனே புதிய சட்டம் வரும்வரையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறையில் இருக்கும் என்று கூறிக் கொண்டிருப்பது மக்களை ஏமாற்றும் - காலத்தைக் கடத்தும் செயற்பாடு மட்டுமே.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

உங்களைத் தவிர வேறு எதுவும் உங்களுக்கு அமைதியைத் தர முடியாது. மற்றவரை அறிந்தவன் புத்திசாலி; தன்னைத்தான் அறிந்தவன் ஞானி.

– ரோலண்ட் ஹில் –





# 4 ஆயிரம் கொள்கலன்கள் துறைமுகத்தில் தேக்கம்!

**கொழும்பு. ஜன.22**

**கொழும்புத் துறைமுகத்தில் இன்னும் அகற்றப்படாத சுமார் 4 ஆயிரம் கொள்கலன்கள் குவிந்துள்ளன என்று கொள்கலன் போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

கொள்கலன்களை துறைமுகத்தில் இருந்து வெளியேற்றுவதற்காக சுமார் 600 லொரிகள் இன்னும் துறைமுக வளாகத்துக்குள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்றும் அந்தச் சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள தெரிவித்துள்ளார். சுங்கத்துறை 24 மணி நேர சேவையை வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டாலும், அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படாததால் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியுள்ளதால் தாமதக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியிருக்கும் என்றும், அதைடொலரில் செலுத்த வேண்டியிருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)



# கோழி இறைச்சி விற்பனை வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 22

மக்களுக்குப் போதிய வருமானம் கிடைக்காத காரணத்தால் நாளாந்த கோழிஇறைச்சி விற்பனை 100 மெற்றிக் தொன்னாக குறைந்துள்ளதாக இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோழிப்பண்ணைகளின் உற்பத்திச் செலவில் 75 வீதம் கால்நடை தீவனத்திற்காக செலவிடப்படுகிறது. கால்நடை தீவனத்துக்கு பெறுமதிசேர் வரி உட்பட 20 வீத வரி விதிக்கப்படுவதால் கோழிப் பண்ணை உரிமையாளர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# ஜோன்ஸ்டன் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 22

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூன்றுபிரதிவாதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஜூன் 3 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வர்த்தக அமைச்சராககடமையாற்றிய போது சதொச ஊழியர்களைப் பணியிலிருந்து நீக்கி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி அரசாங்கத்துக்கு நட்டத்தை ஏற்படுத்தியதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் மேற்படி வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# மலிங்கவின் நூல் வெளியீடு

கொழும்பு, ஜன. 22

இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கவால் எழுதப்பட்ட 'கில்லர்' என்ற நூல் கொழும்பில் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. துடுப்பாட்ட வீரர்களை ஆட்டமிழக்கச் செய்வதற்கான 21 முக்கியமான உத்திகள் தொடர்பில் இந்த நூலில் விவரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# ரணிலுக்கு எதிராக அமெ.நிறுவனம் வழக்கு?

கொழும்பு, ஜன. 22

அமெரிக்காவின் முன்னணி எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மொட்டுக்கட்சியின் ஆட்சியின்போது அமெரிக்க நிறுவனமொன்றுடன் ஒப்பந்தமிடப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத் திட்டத்தை ரணில் விக்கிரமசிங்கவின்ஆட்சியின்போது மீறியமைக்காகவே இந்த வழக்கு தொடரப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பான தகவலை வெளியுறவு சுற்றுலா மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் விஜித ஹேரத் வெளிப்படுத்தியுள்ளார். (ச-இ)

நாளை

வியாழக்கிழமை - தை - 05

23.01.2025

சுபநேரம் : 08.06 - 09.36

ராகுகாலம் : 02.06 - 03.36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதலீடு தொடர்பில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 22


யாழ். மாவட்டத்துக்கு முதலீடுகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அதனால் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்டச் செயலர் ம. பிரதீபன் தலைமையில் யாழ் மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் தேசிய நல்லிணக்க நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் விஜித றொகான் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார். (ச-25, 125)



# சீனாவின் சீருடைத்துணி அதிபர்களிடம் ஒப்படைப்பு

கிளிநொச்சி, ஜன. 22

சீன அரசாங்கத்தின் நன்கொடையில் பாடசாலை மாணவர்களுக்கென இலவசமாக சீருடைத்துணி வழங்கப்பட்டுவரும் நிலையில், கிளிநொச்சி பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கென கிளிநொச்சியிலுள்ள நான்கு கோட்டங்களுக்கும் சீருடைத்துணிகள் கொண்டுவரப்பட்டு பாடசாலை அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ச-25,113)




யாழ்ப்பாணத்தில் சமத்துவப் பொங்கல் நிகழ்வு உரும்பிராய் உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி இராமச்சந்திரனின் 108 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு 108 பானைகளில் பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது. (ச-40-20)



இயற்கையின் நண்பர்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் சிறுதானியப் பொங்கல் நிகழ்வு கைதடி சைவ ஐக்கிய சங்க வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் இயற்கையின் நண்பர்கள் இயக்கத்தின் செயலாளர் த. துளசிராம், உறுப்பினர்கள், கைதடி சிறுவர் கழக சங்கத்தின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-25, 159)





# நட்சத்திர சுற்றுலா விடுதி முல்லைத்தீவில் திறப்பு



முல்லைத்தீவு, ஜன. 22

கனேடிய முதலீட்டில் முல்லைத்தீவு சிலாவத்தையில் கரையோர நட்சத்திர சுற்றுலா விடுதி கட்டப்பட்டுவருகிறது.

முதற்கட்டமாக 12 கபானாக்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டன. முல்லைத்தீவு மாவட்டத்தை பூர்வீகமாகக் கொண்டவரும் கனேடிய முதலீட்டாளருமான அன்டன் சார்ள்ஸ் ஜெயந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் பங்கேற்றார். (ச- 25, 125)



வடக்குக் கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்பப்பிரிவின் ஏற்பாட்டில், 'நெல் கொள்வனவின் போது கவனத்தில் கொள்ளவேண்டிய நியமங்களை நிர்ணயிப்பதற்கான கலந்தாய்வு' எனும் தலைப்பிலான கலந்துரையாடல் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. விதை மற்றும் நடுகைப்பொருள் அபிவிருத்தி நிலையப் பிரதிப்பணிப்பாளர் ரா.சஞ்சீவன் வளவாளராகக் கலந்து கொண்டு விளக்கமளித்தார். (ச-25,20)



நல்லூர்ப் பிரதேச செயலக மூத்தோர் பேரவையின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் கடந்த சனிக்கிழமை யாழ்.நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் நீரிழிவு, இரத்த அழுத்தம், கொலஸ்ரோல் பரிசோதனை ஆகிய பரிசோதனைகள் நடத்தப்பட்டன. (ச-[illegible]66)



யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் யாழ். நகர் மேற்கு சமுர்த்தி வங்கியின் புதிய கட்டுப்பாட்டுச்சபைத் நிர்வாகத்தெரிவு பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது யாழ். நகர் மேற்கு சமுர்த்தி வங்கியின் பிரிவுக்குட்பட்ட பொதுமக்கள், சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச-40-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை

22.01.2025
புதன்கிழமை

உங்களுக்கு என்ன நடக்கிறது என்பது பெரிய விஷயமல்ல, அதற்கான உங்களின் நடவடிக்கை என்ன என்பதே முக்கியம்.

- எபிக்டீடஸ்

பேராசியர் ம.இரகுநாதன்
*வாழ்நாள் பேராசிரியர்,*
*தமிழ்த்துறை*
*யாழ்.பல்கலைக்கழகம்*



# ஏதிலிகளுக்கு வாழ்வளிப்போம்

தூய்மையான இலங்கை' என்ற கருத்துநிலையின் இலக்கு ஊழலற்ற தூய்மையான நிர்வாகத்தை நோக்கமாகக் கொண்டிருக்கலாம். ஆனால் அதை அவ்வாறு மட்டும்தான் பார்க்க வேண்டும் என மட்டுப்படுத்தவேண்டிய அவசியம் இல்லை. ஊழல் மலிந்துவிட்டது எனக் கருதுபவர்களும், இன முரண்பாட்டால் அமைதி குலைந்துவிட்டது எனக் கூறுபவர்களும், நீண்ட கால யுத்தத்தின் கொடூரத்தால் அவலக்குரலை அடக்கமுடியவில்லை என்போரும், பஞ்சம், பசி என்பவற்றால் ஏற்பட்ட துயரங்களைப் போக்க முடியவில்லை என்போரும் தூய்மையான இலங்கையை உருவாக்க இவற்றையெல்லாம் இல்லாமல் செய்யவேண்டும் எனும் கருத்துடையவர்களாக இருக்கலாம். இவர்களின் கருத்தை மறுப்பதற்கில்லை அவற்றோடு சேர்த்து மற்றொரு வகையில் யாழ். நகரில் மேற்கொள்ளவேண்டிய செயற்பாட்டை முன்னொழிவதாகவே இந்த முயற்சி அமைகிறது என்ற கருத்து நிலையுடன் இணைத்து நோக்கப்படுகின்றது.

*இறந்தும் உயிர்வாழ்தல் பேண்டின் பரந்து*
*கெடுக உலகியற்றி யான்*

இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உலகைப் படைத்தவனுக்கு இறப்போர் சார்பில் கொடுத்த சாபம். பொற்காலமென்றும், புகழுடையோர் வாழ்ந்த காலமென்றும் போற்றப்பட்ட காலங்களிலும் பசியுடையோர் வாழ்ந்ததை வள்ளுவரின் குரலால் கண்டுகொள்ளமுடிகின்றது. வள்ளுவரின் காலம் உற்பத்திச் சாதனங்கள் வளர்ச்சியடையாத காலம். பசித்த வேளைக்கு உணவு நிச்சயமில்லாமல் போகலாம். ஆனால் இன்று நவீன யுகம். இக்காலத்திலும் பசித்த வயிற்றோடு பரிதவிக்க வேண்டுமா?

யாழ்ப்பாண நகரத்தில் இரந்து வாழ்பவர்களின் எண்ணிக்கை ஏனைய நகரங்களை விட அதிகம் என்றே கூறலாம். கொழும்பு முதலான பெருநகரங்களில் வீடு தோறும் சென்று இரப்பதற்கான வாய்ப்பு இல்லை. இதனால் தான் பிற மாவட்டங்களைச் சேர்ந்தோரும் யாழ்ப்பாணத்திற்கு வந்து கடைத்தெருக்களிலும் வீடுகளிலும் இரந்துண்டு வாழ்கின்றனர். அங்கவீனர்கள், கைக்குழந்தையுடன் வரும் பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் என்று பலரும் வாழ்வதற்கு ஏற்ற இடமாகவே யாழ்ப்பாணத்தைத் தெரிவு செ க்கின்றார்கள்.

கோடி கோடியாகச் செலவுசெய்து கோயில் கட்டுபவர்கள், கோயில் சிலைகளுக்கு பட்டாடை அணிவித்து பாலாபிஷேகம் செய்பவர்கள், மரணித்துப் போனவர்களுக்கு மறுஉலகத்தில் உடுக்க உடையும், உண்ண உணவும், படுக்கப் பாயும், பாதணிகளும் கொடுத்து திவசம் செய்பவர்கள் பசித்த வயிற்றோடும் பாதிஉடையோடும் பரிதவித்து வருகின்ற எமக்கு வாழ்வளிக்க மாட்டார்களா? என்ற ஏக்கத்துடனும் எதிர்பார்ப்புடனும் அவர்கள் இங்கு வந்திருக்கலாம். யாழ்ப்பாணம் ஏன் இவர்களுக்கு வாழ்வளித்து முன்னுதாரணமாகத் திகழக்கூடாது? அரச முதியோர் இல்லங்களும் தனிப்பட்டவர்களின் பொறுப்பில் இயங்கும் முதியோர் இல்லங்கள் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் முதலானவைகளும் யாழ்ப்பாணத்தில் உள்ள இரவலர்களை அனுமதித்து அவர்களுக்கு வாழ்வளிக்க முயன்றால் யாழ்ப்பாணம் இரவலர்களே இல்லாத நகரமாகிவிடாதா?

யாழ்ப்பாணத்தில் வாழும் வசதி படைத்தவர்களும் புலம்பெயர்ந்த தமிழர்களும் இவ்வாறான பணிக்கு உதவ முன்வரமாட்டார்களா? இதனை ஏன் இவர்கள் ஒரு தெய்வக் காரியமாக எண்ணிச் செயற்படக்கூடாது. முதியோர் இல்லங்கள் ஆதரவற்றவர்களுக்கான புகலிடங்கள். இவர்கள் இழப்பதற்கு எதுவுமே இல்லாத ஏதிலிகள். இவர்களுக்காகவே செயற்படவேண்டிய முதியோர் இல்லங்களில், அரச பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் பிள்ளைகளுடன் வாழ முடியாமல் போனவர்களுக்குப் புகலிடமளிப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது. அத்தகையவர்கள் ஏதிலிகள் அல்ல, ஓய்வூதியம் பெறுபவர்கள், படித்து அரச பதவிகளை வகித்தவர்கள். பிள்ளைகளுடன் ஏற்பட்ட சொத்துரிமை தொடர்பான முரண்பாடுகளினாலும் வேறு கருத்து வேறுபாடுகளாலும் பிள்ளைகளுடன் சேர்ந்து வாழமுடியாது போனவர்கள். உண்மையில் இவர்கள் வாழத்தெரியாதவர்கள். இவர்களுக்குப் புகலிடம் கொடுப்பது முதியோர் இல்லங்களின் நோக்கமாக இருக்கக்கூடாது.

அண்மையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவர் தனது ஒரு காலையும் இழந்த நிலையில் வாழ வழி தெரியாமல் முதியோர் இல்லங்களை அணுகிய போது அங்கு அவருக்கு அனுமதி கிடைக்காததால் தன்னைக் கருணைக்கொலை செய்து விடுமாறு கோரிக்கை விடுத்திருந்தார். இந்தச் செய்தி உதயன் பத்திரிகையிலும் அவரது கையெழுத்திடப்பட்ட கடிதத்தின் பிரதியுடன் பிரசுரமாகியிருந்தது. இவர்கள் ஏன் ஏதிலிகளாக்கப்பட்டார்கள்? அதற்கும் எமக்கும் எந்தத் தொடர்புமே இல்லையா? இவர்கள் இரப்பவர்களாகவே படைக்கப்பட்டவர்களா? இவர்களின் அல்லது இவர்களது மூதாதையரின் உழைப்பால் உதிரத்தால் எமது மண் எந்த விதமான பயனையும் பெற்றுக்கொள்ளவில்லையா? இதனை ஏன் எவரும் சிந்திப்பதில்லை. இவர்களின் கதியற்ற நிலைக்கு நாமும் ஒரு காரணமென்பதை எம்மவர்களில் பலர் உணரமாட்டாதவர்களாக இருப்பது வேதனையான விடயம்.

பொறுப்பாக உள்ள அதிகாரிகள் ஏதிலிகளாக்கப்பட்ட இம்மக்களுக்கு வாழ்வளித்து, யாழ்ப்பாணத்தை புதிய பூமியாக்க முயன்றால் அதுகூட தூய்மையான இலங்கைக்கான வழியாகவே அமையும்.



ஆழமாக யோசித்தால் சொத்துடைமை இல்லாதவர்களாக ஒரு பகுதித் தமிழர்கள் அடிமைப்படுத்தப்பட்ட வரலாறும், நீண்டகால யுத்தத்தால் வாழ்வாதாரங்களை இழந்தவர்களின் வரலாறும் இதற்குள் வந்து போகலாம். மதத்தின் பேரால் ஏற்பட்ட கொடுமை, தூரப் பார்வையற்ற அரசியல் தலைமைத்துவங்களால் ஏற்பட்ட துர்பாக்கியமான விளைவுயாதும் கடந்துபோனவை. இவற்றின் எச்சங்களையே இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். இவை முடிவே இல்லாத துன்பங்களாக இருக்கக்கூடாது. இவை முடித்து வைக்கப்பட வேண்டியவை. பொறுப்பாக உள்ள அதிகாரிகள் ஏதிலிகளாக்கப்பட்ட இம்மக்களுக்கு வாழ்வளித்து, யாழ்ப்பாணத்தை புதிய பூமியாக்க முயன்றால் அதுகூட தூய்மையான இலங்கைக்கான வழியாகவே அமையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கே.எஸ்.சிவஞானராஜா

# திருவெண்காட்டில் தேனாகியது திருவாசகம்

சப்த தீவுகளில் அழகான, அதிசயமான தீவாக மண்டைதீவு விளங்குகிறது. யாழ். நகரிலிருந்து ஆறு கிலோமீற்றர் தூரத்தில், இயற்கை அழகு ஒளித்திருக்குமாறு, இறைவன் பூத்திருக்கும்படியாக, உல்லாசப் பிராயாணிகளுக்கு விருந்தான திருவூர் மண்டைதீவு ஆகும். ஒரு காலத்தில் தன்னிறைவோடு விளங்கிய தாயான தயவானவூராக இலங்கையர்களால் உச்சரிக்கப்பட்ட ஊராக மண்டைதீவு விளங்கியது. போருக்குப்பின்னால், தன் சோபையை இழந்த போதும் மீண்டும் மின்னுமாறு விளங்குகிறது. காரணம் மண்டைதீவு வாழ் மக்கள், சமய சமூக பொருளாதார வாழ்வில் தன்னம்பிக்கையாளர்களாக வாழ்ந்து வருவதனால் போலும். இதன்பேறாக, ஆன்மீக வாழ்வானது தித்திக்கின்றது. ஆலயத்தொண்டின் மீது அதீதபக்தியும், அதிக ஆர்வமும் கொண்ட காரணத்தால் மண்டைதீவு வாழ்மக்கள் மகத்தான வெற்றியைப் பெற்று வருகிறார்கள். அவ்வாறானவர்கள் மண்ணில் நல்லவண்ணம் வாழ்கின்றார்கள். இடம்பெயர்ந்த போதும், மண்டைதீவுக்கு வரம் சேர்த்தார்கள். தற்பொழுதும் மண்வாசனையானது தோற்காமல் இரட்டிப்பாக வீசுகிறது. ஆன்மீகம் அங்கே விளைகிறது.

ஆமாம்! இத்தகு பதியில் பல ஆலயங்கள் அருள்பாலிக்கிறன, ஆறுதல் தருகின்றன, அழகு பெருக்குகின்றன. அங்கு அற்புதம் நிறைந்த பொற்புடன் மிளிர்கின்ற ஆலயமே மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயமாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் அமைந்த ஆகமத் திருத்தலம் இதுவாகும். எழுபத்து மூன்று வருடங்களில் முதன் முதலாக இத்திருப்பதிக்கு யாம் சென்று தரிசிக்கும் வாய்ப்பு எமக்கு வரமாகியது. வானுயர்ந்த கோபுரம் எம்மை வாவென்றழைத்தது. பழுத்த பழமான அடியார்களின் திருவாசகப் பண்பாடு எம்மைக் கவர்ந்தது. அடேயப்பா! சிவபுராணம், கீர்த்தித்திரு அகவல், திரு அண்டப்பகுதி, போற்றித்திரு அகவல், திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை, திருஅம்மானை, திருபொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள;ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவந்தியார், திருத்தோள்நோக்கம், திஐப் பொன்னூசல், அன்னைப்பத்து, குயில்பத்து, திருத்தசாங்கம், திருப்பள்ளி எழுச்சி, கோயில் மூத்ததிருப்பதிகம், கோயில் திருப்பதிகம், செத்திலாப் பத்து, அடைக்கலப்பத்து, ஆசைப்பத்து, அதிசயப்பத்து, புணர்ச்சிப்பத்து, வாழாப்பத்து, அருள்பத்து, திருக்கழுக்குன்றம், கண்டபத்து, பிரார்த்தனைப்பத்து, குழைத்தபத்து, உயிருண்ணிப்பத்து, அச்சப்பத்து, திருப் பாண்டிப்பதிகம், பிடித்தபத்து, திருஏசறவு, திருப்புலம்பல், குலாப்பத்து, அற்புதப்பத்து, சென்னிப்பத்து, திருவார்த்தை, எண்ணப்பதிகம், யாத்திரைப்பத்து, திருப்படை எழுச்சி, திருவெண்பா, பண்டு ஆய நான்மறை, திருப்படை ஆட்சி, ஆனந்தமாலை, அச்சோப்பதிகம் என ஐம்பத்தொரு பதிகங்களையும் மோகனத்தேன் சொட்டுமாறு ஆன்மீகதாகத்தை அள்ளிச் சொரிந்ததெனலாம். ஓதுவார்களும், ஆலயம் சார்ந்த அடியார்களும், அந்தணப்பெருமக்களும், நிர்வாகத்தினரும் ஒருங்கே சேர்ந்து, திருவாசகத் தேனை, மணடைதீவு மண்ணில் நனைந்திடச் செய்தார்கள். தவத்திரு வேலன் சுவாமிகளும் உடனிருந்து சிவப்பேறுதந்தார். தேவர்களும் வந்து வாழ்த்தியது போன்று நெஞ்சிலே திருவாசகம் இனித்தது, கண்ணீர் மல்கியது. 2026ஆம் ஆண்டிலும் திருவாசகம் திருவெண் காட்டில் தேனாகட்டும்.





# மூக்குத்தி அணியலாமா?

சி.நற்குணலிங்கம்

நாகரிகம் என்பது ஒரு மனிதனுடைய நடை, உடை, பாவனை, மற்றும் செய்கைகள் என அனைத்திலும் தங்கியுள்ளது. சில பெண்கள் தாம் அணியும் உடையின் மூலமாகவும், நகைகள் மூலமாகவும் தம்மை ஓர் நாகரிகமானவர்களாக காட்டிக்கொள்ள முனைகிறார்கள். அதற்காக சிலர் மூக்குத்தி அணியவும் விரும்புகிறார்கள். மூக்குத்தி அணிவது அழகுக்காக அல்ல. வேறு பல நன்மைகள் கருதியே மூக்குத்தி அணியப்படுகிறது. சிலர் இதைத் தெரியாமலே மூக்குத்தியை அணிந்து கொள்கிறார்கள். அப்படியில்லாமல் ஏன் அணிய வேண்டும் என்பதைத் தெரிந்துகொண்டு அணிவது சிறப்பாகும்.


17ஆம் நூற்றாண்டுக்குப் பின்பே இந்தியாவில் சிற்பங்கள், ஓவியங்கள் போன்றவற்றில் மூக்குத்தியை பார்க்கக் கூடியதாக இருந்தது. மூக்குத்தி அணியும் பழக்கம் எங்கிருந்து வந்தது என்பது தெளிவாகத் தெரியவில்லை. சில பகுதிகளில் ஆண்களும் அணிந்து கொள்கிறார்கள். இருவரும் அணிவதில் உள்ள வித்தியாசம் பெண்களுக்கு இடதுபுறம் பலமான, வலுவான பகுதியாகையால் அவர்கள் மூக்கின் இடது பக்கத்திலும், ஆண்களுக்கு வலப்புறம் பலமான, வலுவானதாகையால் வலது பக்கத்திலும் அணிந்து கொள்கிறார்கள்.

பருவப் பெண்கள் இதனை அணிவதால், பருவ வயதை அடைந்த பெண்களுக்கு தலைப்பகுதியில் சில விதமான வாயுக்கள் இருக்கும். இதனை வெளிக்கொணர முடியும். மணம் முடித்தவர்கள் கூடுதலாக அணிந்து கொள்கிறார்கள். ஆராய்ந்து அறிந்த நல்ல அணிகலன்களை அணிந்த பெண்ணோடு சேர்ந்திருத்தல் உயிர் உடலோடு சேர்ந்திருக்கும் வாழ்வு போன்றது. 'மூக்கு குத்தும்போது அழுத்தம் கொடுக்கப்படும் நரம்பு, மகப்பேற்று வேளையில் வலியில்லாத குழந்தைப் பிறப்புக்கு வழிவகுக்கும்' என இந்திய மருத்துவ ஆராய்ச்சி கூறுகிறது. தங்க மூக்குத்தி அணிந்தால் அந்தத் தங்கம் உடலில் உள்ள வெப்பத்தை கிரகித்து தன்னுள்ளே ஈர்த்து வைத்துக் கொள்ளும் சக்தியைப் பெறும்.

மூக்குத்தி அணிந்திருக்கும் பெண்கள் மீது மெஸ்மரிசம், ஹிப்னாடிசம் போன்றவற்றை பிரயோகிக்க முடியாது. பார்வைக் கோளாறு நீங்க, மன அமைதி ஏற்பட, சிந்தனைச் சக்தி அதிகரிக்க, சளி, ஒற்றைத் தலைவலி, மூக்கு சம்பந்தமான தொந்தரவுகள் நீங்க, நரம்பு சம்பந்தமான நோய்கள், மனத்தடுமாற்றம் ஏற்படாதிருக்க வழிகோலும். மேலும், மூக்குத்தி அணிவதால் வர்மம் தூண்டப்பட்டு மாதவிடாய்க் கோளாறு நீங்குகின்றன. எதையும் தாங்கிக்கொள்ளும் மனோநிலை ஏற்படும். தெய்வ சக்தி கிடைக்கும். மேற்கூறிய காரணங்களால் நம்முன்னோர் மூக்குத்தி அணியும் பழக்கத்தை ஏற்படுத்தினர். அந்தப் பழக்கம் இன்றும் தொடர்ந்து செல்கின்றது. இதுவரை யாரும் மூக்குத்தி அணியவில்லையாயின் இதை அணிவதால் ஏற்படும் நன்மைகளை அறிந்த பிற்பாடு நாமும் மூக்குத்தி போட்டுக்கலாமா எனத் தோன்றுவதில் தவறில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீநுண் உயிரியலில் செயற்கைக் கலங்கள்



மருத்துவர் சி. யமுனாநந்தா

விஞ்ஞானத் தொழில்நுட்பம் மிகவும் அபரிமிதமாக நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்து வருகின்றது. இவற்றில் முக்கியமானது நனோத் தொழில்நுட்பம், உயிர்மூலக்கூற்றுத் தொழில்நுட்பம், இயற்பியல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் என்பனவாகும். நனோத் தொழில்நுட்பம் மூலம் செயற்கையான கலமென்சவ்வு, செயற்கையான கலப்புன்னங்க மென்சவ்வு, செயற்கையான டி.என்.ஏ, நனோ றோபோ என்பவற்றை உருவாக்குவதில் விஞ்ஞானிகள் வெற்றிகண்டுள்ளனர். இத்தகைய உடற்றொழிலியல் அடிப்படை கட்டமைப்புக்களின் உருவாக்கம் செயற்கை உயிரியல் எனும் பரிணாமத்தினை உயிரியலில் உருவாக்க முனைகின்றது.

செயற்கையான கல மென்சவ்வுகளில் ஊடு அயன்கள், அனுசேபம் பதார்த்தங்கள் என்பவற்றினை ஊடுபுகும் ஆற்றலைக் கட்டுப்படுத்தலாம். இவ்வாறாக அமைக்கப்படும் இருபடி இலிப்பிட்டு மென்சவ்வுகள், மருத்து வத்தில் சிலநோய் நிலைகளிற்கான சிகிச்சைக்குத் தீர்வாக அமையும். இவை நனோ உயிர்மூலக் கூற்று மருத்துவமாக மிளிரும்.



இத்தகைய புதிய தொழில்நுட்பத்தின் பிரயோகங்களின் மூலம் செயற்கை கலங்களின் உடற்றொழிலியல் செயற்பாட்டினை ஏற்படுத்தக்கூடியதாக அமையும். மேலும் தகவல்தொழில்நுட்பத்தின் தொடர்பாடல்கள் மூலம் கட்டுப்படுத்தக்கூடிய நனோ றோபோ டி.என்.ஏ மூலம் இயற்கையான கலங்க ளுக்கு அதன் செயற்பாட்டினை மாற்றி அமைக்கவும் அனுகூலமான அனுசேப விளைவுகளை உருவாக்கவும் முடியும்.


இவை மருத்துவத்துறைக்கு மட்டுமல்ல தொழில்நுட்பம் உலகில் உள்ள அனைத்து உயிர்க்கலங்களிலும் செயற்கைத் தன்மையினை ஏற்படுத்தும்.

குறிப்பாகத் தாவரங்களில் ஒளித்தொகுப்பு முதல் விலங்குகளில் எமக்குத் தேவையான பிரதிபலன்களைப் பெறவும் துணைபோகும். மனித குலத்தின் செயற்பாட்டை மாற்றி அமைக்கவும் நோய் நிலைகளுக்கான சிகிச்சைக்கான வழிமுறைகளாகவும் இவை எதிர்வரும் 50 வருடங்களில் அமைந்துவிடும்.

இது எங்ஙனம் எனின் கடந்த 50 வருடங்களுக்கு முன் செயற்கை அவயவங்கள் செயற்கை இருதயம் என்பன மருத்துவத்தின் எதிர்காலத்திற்கு முனைப்பாக மருத்துவ ஆய்வில் இருந்தனவோ அவ்வாறேயாகும்.

# நவீன யுகத்தை வெற்றிகொள்ள கல்வி மிக முக்கியமானது

பத்மசேனன் சனோசன் (பி.ஏ.)



கல்வி உலகை மாற்றப் பயன்படும் சக்தி வாய்ந்த ஆயுதம்" ஒரு மனிதனின் சிறந்த வாழ்க்கைக்கு கல்வி அதிகம் பயன்படுகிறது. கல்வியின் ஆழ்ந்த நோக்கம், ஒருவனை ஒழுக்கமுடையவனாகவும், ஆற்றல்களை பயன்படுத்தும் திறன் உள்ளவனாகவும் மாற்றுவதாகும். ஆனால் இவற்றை எங்களுடைய கல்வியில் நாம் பின்பற்றுகின்றோமா? என்பதனை நன்கு சிந்திக்க வேண்டும். இது தொடர்பான கருத்துக்கள் எப்படியான கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகின்றன? கல்வியைக் கொண்டு எதனை திறன் படச் செய்கின்றோம்? என்பதில் கூடிய தெளிவு இல்லாமல் இருப்பதும் எமது சமூகத்திற்கும், நாட்டிற்கும், உலகிற்கும் பெரியதொரு சவாலான விடயமாக இருக்கின்றது.

18

நாம் புத்தக பூச்சிகளாகக் கொண்ட கல்வியை மட்டும் பின்பற்றாமல் அனுபவம் சார்ந்த கல்வியைப் பின்பற்றவேண்டும். உலகம் இப்போது பல்வேறு நிலைகளில் முன்னேற்றம் அடைந்திருக்கும்போது கல்வியையும் நாம் விருத்தி செய்யவேண்டும். பொதுவாக கற்றல் என்ற ஓர் சிந்தனைப் போக்கில், புத்தகங்களை அதிகம் பயன்படுத்துகிறோம். ஆனால் நிகழ்காலத்தின் சவால்களை வெற்றிகொள்ளக் கூடிய அனுபவக் கல்வியே மிக முக்கியமான கல்வியாகும்.

*"பிரச்சினைகளுடன் திண்டாடுவதன் மூலம் தனிப்பட்ட ரீதியில் பெறும் உண்மையான அனுபவமே கல்வி"*

*(ஜோண்டியூவி)*

நாம் கடந்த, எதிர் காலத்தை எண்ணி வருந்துவதும், பயப்படுவதும், எங்களுடைய நிகழ்காலத்தை சிறப்பாக பயன்படுத்தத் தவறி விடுவச்செய்யும். இந் நிலையில் எங்கள் வாழ்வில் நிகழ்காலமே நிலையானது என்பதை இவ்விதி கூறுகின்றது. எங்களுடைய நிகழ்காலத்தில் எழும் சவால்களையும் வெற்றி கொள்ளக் கூடிய அனுபவக் கல்வியை எவ்வாறு இணைந்து பயன்படுத்துகின்றோம் என்பது கேள்வியாகிறது என்பது இன்றைய நவீன உலகில் தலையெடுத்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இயற்கை மனிதனிடம் இருந்து நல்லவற்றை எதிர்பார்க்கும்போது நாம் தடம்மாறி செல்வது போன்ற விடயங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

நாம் பலவற்றை மாற்றம் செய்து சமூகம், நாடு போன்றவற்றினை முன்னேற்றுகின்ற கல்வி முறையே இப்போது மிகவும் தேவை . இன்றைய நவீன சூழல் மாணவர்களின் மனங்களில் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்துவதே, வெற்றிகரமான சிறந்த தலைவர்களை எதிர்காலத்தில் உருவாக்க வழி செய்யும். தோல்வியால் துவண்டுவிடும், போதைப்பொருள் பாவனையால் அலைக்கழிக்கப்படும்,தற்கொலையால் துன்பப்படும் ஒருவராகவே உருவாக நாமே காரணமாக இருந்துவிடக் கூடாது. இன்றைய நவீன உலகத்தில் அனுபவத்துடனான கல்வியை நாம் அதிகம் பயன்படுத்த தவறும் பட்சத்தில் அவை, தோல்வியின் விளிம்பிலேயே எங்களை வைத்திருக்கும். பொதுவாக ஒழுக்கமும், திறமையும் இணைந்து சிறந்த கல்வியைக் கொடுப்பது போல கல்வியும், அனுபவமும் ஒருவருடைய வாழ்வை சிறப்பாக வாழ்வதற்கான அறிவை கொடுக்கிறது. எனவே கல்வி என்ற வெற்றி விதியினை அனுபவ ரீதியாகப் பயன்படுத்துவோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை - காங்கேசன்துறை உபஅலுவலகம்

| | |
|---|---|
| உரிமையாளர் பெயர் | - கணேசன் உதயகுமார் கோகுலப்பிரியா |
| விண்ணப்பதாரர் பெயர் | - கணேசன் உதயகுமார் |
| முகவரி | - கலவத்தை ஒழுங்கை, காங்கேசன்துறை |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் காங்கேசன்துறை உபஅலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் - 03, காங்கேசன்துறை வீதி (கலவத்தை ஒழுங்கை) ஆதன இல 1254/7இல் அமைந்துள்ள தெல்லிப்பளை கோவிற்பற்று வீமன்காமம் இறை "கலவத்தை" என்ற ஆதனம் சொந்தக்காரர் உரிமை கோருபவர் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

குறித்த ஆதனமானது 17.02.2018 ஆந் திகதிய சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிஸ் இராசேந்திரன் வசந்தசேனன் அவர்கள் முகதாவில் இலக்கம் 74இல் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதியால் வெளிப்படுத்தப்பட்டு விண்ணப் பதாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட உறுதியின் தாய் உறுதியான சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிஸ் க.சி.செ.முத்துக்குமாரு அவர்களால் 10.09.1999ஆம் திகதிய 4557 ஆம் இலக்க நன்கொடை உறுதியால் காசிப்பிள்ளை தில்லைநாயகம் என்பவரால் காத்திகேயன் திவானிக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ் உறுதியில் காட்டப்பட்ட 4198 ஆம் இலக்க 16.01.1995 ஆம் திகதிய தாய் உறுதி நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக தவறவிடப்பட்டுவிட்டது. அத்துடன் தாய்உறுதிக்காக காணிப்பதிவகத்திற்கு விண்ணப்பித்தபோது காணிப்பதிவாளரால் குறித்த உறுதி தொலைந்துவிட்டதென சான்றிதழ் பிரதி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த ஆதனம் 16.01.1995 ஆம் திகதிய 4198 ஆம் இலக்க உறுதியின்படி காசிப்பிள்ளை தில்லைநாயகம் என்பவரது பெயரில் இருந்ததாகவும் அவரால் 10.09.1999 ஆம் திகதிய 4557 ஆம் இலக்க நன்கொடை உறுதியின் மூலம் காத்திகேயன் திவானிக்கு வழங்கப்பட்டது. பின் அவர்களால் 17.02.2018 ஆம் திகதிய 74 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் உதயகுமார் மகள் கோகுலப்பிரியாவுக்கு உதயகுமாரினதும் பெண் விஜயகுமாரியினதும் சீவிய உரித்துக்கமைய வழங்கப்பட்டுள்ளது.

**ஆதனவிபரம்:-**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று வீமன்காமம் இறை தெல்லிப்பளை பிரதேசசெயலக பிரிவு தெல்லிப்பளை பிரதேசசபை கிராமசேவகர் பிரிவு J/235 "கலவத்தை" நில.பர மூன்றும் (3) குளி நான்கரையும் (4 1/2) தெற்கே மிகுதிக் காணிக்குள் இருக்கும் கிணற்றிலும் தூர்வையிலும் பங்கும் வான்செய்பயிர்களும் இந்த நில. பர மூன்று (3) குளி நான்கரைக்கும் **எல்லைகள்**

**கிழக்கு :-** மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆதனம்
**வடக்கு :-** உதயகுமார் கௌதமபிரியனின் ஆதனம்
**மேற்கு :-** கை ஒழுங்கை
**தெற்கு :-** பாலச்சந்திரன் பெண் வசந்தகுமாரியின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை உதயகுமார் மகள் கோகுலப்பிரியா பெயரில் ஆதனப் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவராக இருப்பின் இங்குள்ள உறவினர்க்கூடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனையை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் உதயகுமார் மகள் கோகுலப்பிரியா பெயரிற்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(சு. 57278 B) (N-1)

---

# மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்



## திருவாளர் சாந்தலிங்கம் வெற்றிவேலுப்பிள்ளை

சிரேஸ்ர ஆசிரியர் - யா / நயினாதீவு மகா வித்தியாலயம்

**(B.A, Dip in Education, M.A Tamil, SLTS 1)**

**அவர்களின் ஓய்வுக்காலம் சிறக்க மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

**சேவைக் காலம்**

- 17.08.1988 - 03.08.1999
  யா/ ந.ஶ்ரீ.க.க. மகா வித்தியாலயம்
- 04.08.1999 - 17.09.2001
  யா/ புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்
- 18.09.2001 - 11.08.2010
  யா/ நயினாதீவு மகா வித்தியாலயம்
- 12.08.2010 - 31.12.2010
  தீவகக் கல்வி வலயம், வேலணை,
  உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்)
- 01.01.2011 - 20.01.2025
  யா/ நயினாதீவு மகா வித்தியாலயம்

**வாழ்த்துவோர்:**
**பாடசாலைச் சமூகம் யா/நயினாதீவு மகா வித்தியாலயம் நயினாதீவு.**

---

# யாழ்ப்பாணத்தில் குருதிக்கொடை இன்று

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ். போதனா மருத்துவமனையில் தற்போது நிலவும் குருதித் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு 'சேவ் ஏ லைவ்' நிறுவனத்தினர் நடத்தும் குருதிக்கொடை முகாம் இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள



நிறுவன அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. குருதிக்கொடை ஆர்வலர்கள் முகாமில் கலந்துகொண்டு குருதிக்கொடையளிக்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)



## கிணற்றில்...

நேற்றுக் காலை குறித்த தோட்டத்தில் வேலை செய்வதற்காக வந்தவர்கள் தோட்டக் கிணற்றில் சிசுவின் சடலத்தை அவதானித்தனர். இது தொடர்பில் கிராம அலுவலர் மூலம் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தின் கவனத்துக்கு விடயத்தைக் கொண்டுசென்றனர். நீதிபதியின் கள ஆய்வுகளைத் தொடர்ந்து, சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்னவின் வழிகாட்டலின் கீழ் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், சிசுவைப் பிரசவித்தவர் என சந்தேகிக்கப்படும் 43 வயதான பெண்ணையும், அந்தப் பெண்ணின் தாயாரையும், அவரின் சகோதரியையும் (சிசுவைப் பிரசவித்தவரின் சகோதரி) கைது செய்தனர். அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்ககப்பட்டுள்ளன.

(அ-ம-28-26-66-20-159)

## அர்ச்சுனா...

அதிகாரிகள் சிலர் அர்ச்சுனாவின் வாகனத்தை நிறுத்தி அவரது தேசிய அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப் பத்திரத்தை கோரியுள்ளனர். ஆனால், ஆவணங்களை வழங்க மறுத்து, பொலிஸ் அதிகாரிகளுடன் அர்ச்சுனா வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதனையடுத்து, போக்குவரத்து சட்டங்கள் மற்றும் குற்றவியல் நடைமுறைகளின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனுக்கு எதிராக நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இதையடுத்தே நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவைக் கைது செய்யுமாறு அநுராதபுரம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-இ)

---

## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை - காங்கேசன்துறை உபஅலுவலகம்

| | |
|---|---|
| உரிமையாளர் பெயர் | - உதயகுமார் விஷ்ணுபிரியன் |
| விண்ணப்பதாரர் பெயர் | - கணேசன் உதயகுமார் |
| முகவரி | - கலவத்தை ஒழுங்கை, காங்கேசன்துறை |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் காங்கேசன்துறை உபஅலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் - 03, காங்கேசன்துறை வீதி (கலவத்தை ஒழுங்கை) ஆதன இல 1254/8இல் அமைந்துள்ள தெல்லிப்பளை கோவிற்பற்று வீமன்காமம் இறை "கலவத்தை" என்ற ஆதனம் சொந்தக்காரர் உரிமை கோருபவர் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

குறித்த ஆதனமானது 09.05.2017 ஆந் திகதிய சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிஸ் இராசேந்திரன் வசந்தசேனன் அவர்கள் முகதாவில் இலக்கம் 11534 இல் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதியால் வெளிப்படுத்தப்பட்டு விண்ணப் பதாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட உறுதியின் தாய் உறுதியான சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிஸ் க.சி.செ.முத்துக்குமாரு அவர்களால் 14.09.1999ஆம் திகதிய 11082 ஆம் இலக்க நன்கொடை உறுதியால் காசிப்பிள்ளை தில்லைநாயகம் என்பவரால் பாலச்சந்திரன் பெண் வசந்தகுமாரிக்கு வழங்கப் பட்டுள்ளது. இவ் உறுதியில் காட்டப்பட்ட 4198 ஆம் இலக்க 16.01.1995 ஆம் திகதிய தாய் உறுதி நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக தவறவிடப் பட்டுவிட்டது. அத்துடன் தாய்உறுதிக்காக காணிப்பதிவகத்திற்கு விண்ணப்பித்தபோது காணிப்பதிவாளரால் குறித்த உறுதி தொலைந்துவிட்டதென சான்றிதழ் பிரதி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த ஆதனம் 16.01.1995 ஆம் திகதிய 4198 ஆம் இலக்க உறுதியின்படி காசிப்பிள்ளை தில்லைநாயகம் என்பவரது பெயரில் இருந்ததாகவும் அவரால் 14.09.1999 ஆம் திகதிய 11082 ஆம் இலக்க நன்கொடை உறுதியின் மூலம் பாலச்சந்திரன் பெண் வசந்தகுமாரிக்கு வழங்கப்பட்டது. பின் அவர்களால் 09.05.2017 ஆம் திகதிய 11534 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் உதயகுமார் விஷ்ணுபிரியனுக்கு உதயகுமாரினதும் பெண் விஜயகுமாரியினதும் சீவிய உரித்துக்கமைய வழங்கப்பட்டுள்ளது.

**ஆதனவிபரம்:-**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று வீமன்காமம் இறை தெல்லிப்பளை பிரதேசசெயலக பிரிவு தெல்லிப்பளை பிரதேசசபை கிராமசேவகர் பிரிவு J/235 "கலவத்தை" நில.பர மூன்றும் (3) கிணறும் தூர்வையும் வான்செய்பயிர்களும் இந்த நில. பர மூன்றுக்கும் **எல்லைகள்**

**கிழக்கு :-** சுப்பர் வைரமுத்துவின் ஆதனம்
**வடக்கு :-** கார்த்திகேயன் திவாணியின் ஆதனம்
**மேற்கு :-** கை ஒழுங்கை
**தெற்கு : -** இராசேந்திரசீலன் பெண் சாந்தகுமாரியின் ஆதனம் இதனடங்கலும் குறித்த கிணற்றிலும் தூர்வையிலும் பிறபங்குகள் புறநீங்கலாக

மேற்குறித்த ஆதனத்தை உதயகுமார் விஷ்ணுப்பிரியன் பெயரில் ஆதனப் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருப்பின் இங்குள்ள உறவினர்க்கூடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனையை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் உதயகுமார் விஷ்ணுப்பிரியன் பெயரிற்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(சு. 57278 A) (N-1)

---

## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை - காங்கேசன்துறை உபஅலுவலகம்

| | |
|---|---|
| உரிமையாளர் பெயர் | - உதயகுமார் கௌதமப்பிரியன் |
| விண்ணப்பதாரர் பெயர் | - கணேசன் உதயகுமார் |
| முகவரி | - கலவத்தை ஒழுங்கை, காங்கேசன்துறை |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் காங்கேசன்துறை உபஅலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் - 03, காங்கேசன்துறை வீதி (கலவத்தை ஒழுங்கை) ஆதன இல 1254/6இல் அமைந்துள்ள தெல்லிப்பளை கோவிற்பற்று வீமன்காமம் இறை "கலவத்தை" என்ற ஆதனம் சொந்தக்காரர் உரிமை கோருபவர் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

குறித்த ஆதனமானது 17.02.2018 ஆந் திகதிய சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிஸ் இ.வசந்தசேனன் சிவானி அவர்கள் முகதாவில் இலக்கம் 73 இல் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதியால் வெளிப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட உறுதியின் தாய்உறுதியான சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிஸ் க.சி.செ.முத்துக்குமாரு அவர்களால் 10.09.1999ஆம் திகதிய 4556 ஆம் இலக்க நன்கொடை உறுதியால் காசிப்பிள்ளை தில்லைநாயகம் என்பவரால் கார்த்திகேயன் வாழ்நிலாவிற்கு வழங்கப் பட்டுள்ளது. இவ் உறுதியில் காட்டப்பட்ட 4198 ஆம் இலக்க 16.01.1995 ஆம் திகதிய தாய் உறுதி நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக தவறவிடப் பட்டுவிட்டது. அத்துடன் தாய்உறுதிக்காக காணிப்பதிவகத்திற்கு விண்ணப்பித்தபோது காணிப்பதிவாளரால் குறித்த உறுதி தொலைந்துவிட்டதென சான்றிதழ் பிரதி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த ஆதனம் 16.01.1995 ஆம் திகதிய 4198 ஆம் இலக்க உறுதியின்படி காசிப்பிள்ளை தில்லைநாயகம் என்பவரது பெயரில் இருந்ததாகவும் அவரால் 10.09.1999 ஆம் திகதிய 4556 ஆம் இலக்க நன்கொடை உறுதியின் மூலம் கார்த்திகேயன் வாழ்நிலாவிற்கு வழங்கப்பட்டது. பின் அவர்களால் 17.02.2018 ஆம் திகதிய 73 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் உதயகுமார் கௌதமப்பிரியனுக்கு உதயகுமாரினதும் பெண் விஜயகுமாரியினதும் சீவிய உரித்துக்கமைய வழங்கப்பட்டுள்ளது.

**ஆதனவிபரம்:-**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று வீமன்காமம் இறை தெல்லிப்பளை பிரதேசசெயலக பிரிவு தெல்லிப்பளை பிரதேசசபை கிராமசேவகர் பிரிவு J/235 "கலவத்தை" நில.பர மூன்றும் (3)குளி நான்கரையும் (4 1/2) மிகுதிக் காணிக்குள் இருக்கும் கிணற்றிலும் தூர்வையிலும் பங்கும் வான்செய்பயிர்களும் இந்த நில.பர மூன்று (3)குளி நான்கரைக்கும் **எல்லைகள்**

**கிழக்கு :-** மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆதனம்
**வடக்கு :-** ஒழுங்கை
**மேற்கு :-** கை ஒழுங்கை
**தெற்கு : -** கார்த்திகேயன் திவானியின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை உதயகுமார் கௌதமப்பிரியன் பெயரில் ஆதனப்பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருப்பின் இங்குள்ள உறவினர்க்கூடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனையை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் உதயகுமார் கௌதமப்பிரியன் பெயரிற்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன் உரிமை மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(சு. 57278 C) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியாப் பிரதேச செயலகத்தின் பொங்கல் விழா வவுனியாப் பிரதேச செயலாளர் இ.பிரதாபன் தலைமையில் பிரதேச செயலக வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது பொங்கல் விழாவை முன்னிட்டு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள ஒன்பது கிளைகளுக்கும் இடையில் போட்டி நிகழ்வும், தமிழர் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் முகமான நடனங்களும் இடம்பெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்டப் பிரதேச செயலாளர் சரத் சந்திர, தமிழ்மணி அகளங்கன் மற்றும் அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-25,110)





தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த முச்சக்கரவண்டிச்சாரதிகளிடையே வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக நடத்தப்பட்ட பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த மூன்று முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்கும் விஞ்ஞானத் தொழில்நுட்ப அமைச்சின் விதாதாப் பிரிவினரால் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான காசோலைகள் கடந்த வியாழக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. (ச-25,9)





குப்பிழான் விக்கினேஸ்வரா சனசமூக நிலைய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் தைப் பொங்கல் விழா நிலையத் தலைவர் சுப்பிரமணியம் சுதாகரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட சிறார்கள், மாணவர்கள் அனைவருக்கும் ஊக்குவிப்புப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ச-25, 66)



# சவேரியார் கல்லூரியில் சூரிய மின்சக்தித் திட்டம்

மன்னார், ஜன. 22

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் சூரிய மின்சக்தி செயற்றிட்டம் கடந்த வெள்ளிக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் கிளைச்சங்கமான ஐக்கிய இராச்சியத்தின் பழைய மாணவர் சங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் ஐக்கிய இராச்சியப் பழைய மாணவர் சங்கக் கிளையின் தலைவர் எம்.டேவிட் தயாபரன், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து சூரிய மின்சக்தி படலத்துக்கான நினைவுக் கல்லைத் திறந்துவைத்ததுடன் சூரிய மின்சக்திச் செயற்பாட்டையும் ஆரம்பித்துவைத்தனர். (ச-25,213 56)



# பாஷையூரில் எம்.ஜி.ஆர். நினைவு

யாழ்ப்பாணம்,ஜன.22

மறைந்த தென்னிந்தியப் பழம்பெரும் புரட்சி நடிகரும் தமிழக முன்னாள் முதலமைச்சருமான எம்.ஜீ.இராமசந்திரனின் 108 ஆவது ஜனனதின நிகழ்வு யாழ்ப்பாணம் - பாஷையூரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் அமரரின் உருவச்சிலைக்கான மலர்மாலையை யாழ்ப்பாண மாநகரசபை முன்னாள் முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் அணிவித்தார். தொடர்ந்து சிறப்புரை இடம்பெற்றதுடன் பொருளாதாரம் நலிவுற்ற குடும்பங்களுக்கு உதவித்திட்டங்களும் வழங்கப்பட்டன. (ச-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வலி கிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்-அச்சுவேலி**
**அரைக்கும் ஆலைக்கு வேலையாட்கள் தேவை**

பருத்தித்துறை வீதி சிறுப்பிட்டியில் அமைந்துள்ள எமது சங்கத்தின் அரைக்கும் ஆலைக்கு வேலையாட்கள் தேவையாகவுள்ளது. வேலையானது பகுதி நேரமாகவும் அல்லது ஒப்பந்த அடிப்படையிலும் வேலை செய்யலாம். ஆர்வம் உள்ளவர்கள் பொதுமுகாமையாளர், வலி கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்-அச்சுவேலி, பருத்தித்துறை வீதி, புத்தூர் என்னும் முகவரிக்கு தங்கள் சுயவிபரக் கோவையை சமர்ப்பிக்கவும்.

**பொதுமுகாமையாளர்**

தொடர்புகளுக்கு: **077 106 3311**

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியை **திருமதி பி.சுரேந்திரன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்
**அல்பிரேட் சின்னத்துரை**
அவர்கள் கடந்த 08.01.2025 புதன்கிழமை காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம்**
**யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

(CS/57289) J-1

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியை **திருமதி சி. பாலகிருஷ்ணன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்
**ஆறுமுகம் துரையப்பா**
அவர்கள் கடந்த 08.01.2025 புதன்கிழமை காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம்**
**யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

(CS/57288) J-1

## காணித் தரகர் தேவை

Face Book, Youtube, Tik tok, Whats app Group, Instagram மற்றும் ஏனைய விளம்பரம் சார்ந்த ஊடகங்களில் விளம்பரப்படுத்தாமல் சுயமாக காணி விற்பதற்கும், வாங்குவதற்கும் தரகர் தொழில் செய்யக்கூடியவர்கள் தேவை.

**077 688 5392**

(CS/57292) J-1

# ஈஸ்டர் தாக்குதல்கள் விசாரணைகள் துரிதம்

உயிர்த்தஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
தூய இலங்கை திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வோம். இலக்கை அடையும்வரை இந்த விடயத்தில் நாம் பின்வாங்கப் போவதில்லை. தூய இலங்கைத் திட்டத்துக்குரிய முன்மாதிரிகையை நாம் மேல் மட்டத்தில் இருந்தே வழங்கியுள்ளோம். அமைச்சுகளில் உறவினர்களுக்கு நியமனம் இல்லை. தூதரக சேவைகளுக்கு தகுதியானவர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். அரச செலவினங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

'கள்வர்களை பிடித்துவிட்டீர்களா?' என சிலர் கேட்கின்றனர். எமக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் இருந்தாலும் நாம் ஏதேச்சதிகாரமாகச் செயற்படப்போவதில்லை. சட்டத்தின் பிரகாரமே நடவடிக்கை இடம்பெறும்.

சில சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் அதில் ஒன்றாகும். நாம் எவரையும் பழிவாங்கமாட்டோம். நாட்டின் சட்டம் அனைவருக்கும் பொதுவானதாகும். பணம் உள்ளவர்களுக்கு ஒரு சட்டம், பணம் இல்லாதவர்களுக்கு இன்னொரு சட்டம் என்று எம்மால் நடைமுறைப்படுத்த முடியாது - என்றார். (ம)

## நிதி நிறுவனத்தில் நகைகள் மாயம் இரண்டு யுவதிகள் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 22
வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் அமைந்துள்ள நிதி நிறுவனத்தில் அடகு வைக்கப்பட்டுள்ள ஒருதொகை தங்க நகைகள் மாயமான சம்பவம் தொடர்பில் இரண்டு யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தங்க நகைகள் மாயமானமை தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் ஏற்கனவே விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

ஊழியர் ஒருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் இரு யுவதிகள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இரவு மருதங்கேணிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், இன்று புதன்கிழமை அவர்களை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-66)



## நிதிக் குற்றத்துக்கு விசாரணைப் பிரிவு!

கொழும்பு, ஜன் 22
நிதிக் குற்ற விசாரணைப் பிரிவு அடுத்தவாரம் அமைக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தூய இலங்கைத் திட்டத்தின் மூலம் பொலிஸார் முன்னெடுத்த நடவடிக்கையால் வீதி விபத்துகள் குறைவடைந்துள்ளன. உயிரிழப்பு எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது. விபத்துகளை கட்டுப்படுத்தி உயிரிழப்பு மற்றும் உடல் அவயங்களை இழப்பவர்களின் எண்ணிக்கையை குறைப்பதும் தூய இலங்கைத் திட்டத்தின் ஓர் அங்கமாகும்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் 29 ஆயிரம் கோப்புகள் உள்ளன. நிதி குற்ற விசாரணைப் பிரிவு அடுத்தவாரம் ஆரம்பிக்கப்படும். அவ்வாறு ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் நிதி குற்றம் தொடர்பான கோப்புகள் அந்த பிரிவிடம் விசாரணைக்கு ஒப்படைக்கப்படும் - என்றார். (ம-44)

**யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை**
**Jaffna International Trade Fair**
15th EDITION
வடக்கிற்கான உங்களது நுழைவாயில்
வருகை
JITF 2025
15TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR
JANUARY ஜனவரி
24 25 26
10.30மு.ப - 8.30பி.ப
Muttraweli Grounds (Next to Jaffna Fort) முற்றவெளி மைதானம் (யாழ் கோட்டைக்கு அருகில்)
PLATINUM SPONSOR DIMO | GOLD SPONSORS | SILVER SPONSORS | OFFICIAL SPONSORS | ORGANIZED BY LECS
Imalka: +94 77 1093792 | imalka@saexhibitions.com

## மரண அறிவித்தல்



**திருமதி அன்னலட்சுமி**

மண்கும்பானை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி அவர்கள் நேற்று (21.01.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - மாரிமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி, மாணிக்கவாசகர் ஆகியோரின் மனைவியும், நாகரத்தினம், காலஞ்சென்ற விஜயகாந்தன், மற்றும் டேவிட் (பெறாமகன்), விஜயலதா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2025) புதன்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 624 9802

(CS/2348) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காய்ச்சலால்...

புங்குடுதீவு ஆறாம் வட்டாரத்தைச் சேர்ந்த, கிருஷ்ணகுமார் அபிஷா (வயது-4) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
சிறுமிக்குக் காய்ச்சல் ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர் புங்குடுதீவில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும், காய்ச்சல் குணமடையாத நிலையில், அவர் யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார். அதன் பின்னர், அந்தச் சிறுமி புங்குடுதீவில் உள்ள தனது வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் மீண்டும் சுகவீனம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, புங்குடுதீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அந்தச் சிறுமி முன்னதாகவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நிமோனியா காய்ச்சல் காரணமாகவே அந்தச் சிறுமி உயிரிழந்துள்ளார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளது. அத்துடன், சிறுமிக்கு மருத்துவம் வழங்கிய தனியார் மருத்துவமனையின் கவனக் குறைவும் இறப்புக்குக் காரணம் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
இறப்பு விசாரணைகளை ஊர்காவற்றுறை பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி என்.தியாகராஜா மேற்கொண்டார். ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26-125)

## 2024 இல்...

தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் கோரப்பட்ட தகவலுக்கமைவாக அவர் இந்தத் தகவலை வழங்கியுள்ளார். இதன்படி, வடமாகாணத்தில் கடந்த வருடம் 34 படுகொலைகள் பதிவாகியுள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.
அத்துடன், கடந்த வருடம் வடக்கு மாகாணத்தில் 255 கொள்ளைகள் இடம்பெற்றுள்ளன. 501 திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன. 70 பேர் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்றும் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் தனபால மேலும் தெரிவித்துள்ளார்.
கடந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் டிசெம்பர் 13ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் பதிவாகிய தரவுகளின் அடிப்படையிலேயே இந்தத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ச-125)

## 28 பொலிஸார்...

திகதி தொடக்கம், 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதிவரையான காலப்பகுதியிலேயே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் திலக் தனபால தெரிவித்துள்ளார். (அ-ம-125)

## பிடியாணை...

என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 2016ஆம் ஆண்டு திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நகைகளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில், சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 47 வயதான ஒருவரை பொலிஸார் கைதுசெய்திருந்தனர். சந்தேகநபர் 2023ஆம் ஆண்டு முதல் வழக்குகளுக்குச் சமுகமளிக்காத நிலையில் நீதிமன்றத்தால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.
அவர் பலாலி விமான நிலையத்தின் ஊடாக நேற்று வருகைதந்தபோதே கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. (அ-ம-125)

## பெப்ரவரி...

வுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சிக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பிலும், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் தொடர்பிலும், கட்சியின் அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-ம-26)

## வடக்கின்...

அலுவலகத்தில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போதே, வடமாகாணத்தை மையப்படுத்திய தமது அரசின் திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி அநுர உலக வங்கியின் பிரதானிகளிடம் தெளிவுபடுத்தியுள்ளார்.
ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும், தண்ணீர் வசதிகளை வழங்கவும், வடக்கு மக்களின் சமூகப் பிரச்சினைகளுக்கு கலாசார அடையாளத்தைப் பாதுகாக்கும் வகையில் தீர்வு வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
வடக்கு மாகாணத்தில் விமான நிலையம் மற்றும் துறைமுக அபிவிருத்திக்கான புதிய திட்டங்கள் செயற்படுத்தப்படும். குறிப்பாக துறைமுக அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் இடம்பெறவுள்ளன. வடமாகாணத்தில் முதலீட்டு வலயங்களை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
புதிய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கல்விச் சீர்திருத்த முயற்சிகளுக்கும் பொதுப் போக்குவரத்துத் துறையின் முன்னேற்றத்துக்கும் தேவையான உதவிகளை வழங்குமாறு உலக வங்கியிடம் கோரிக்கை விடுக்கிறோம்.
இலங்கையின் விவசாயத்துறையில் 28 வீதம் தொழிற்படை ஈடுபட்டிருந்தாலும் இலங்கைப் பொருளாதாரத்துக்கு விவசாயத்துறையில் இருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 6 வீதம் பங்களிப்புக் கிடைப்பது போதுமானதாக இல்லை. எனவே, விவசாய விரிவாக்கத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் திட்டமிட்டுள்ளோம் - என்றார்.
ஜனாதிபதியின் கருத்துகளைக் கேட்டறிந்த உலக வங்கியின் பிரதிநிதிகள், அரசாங்கத்தின் திட்டங்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்குத் தயார் என்று தெரிவித்தனர்.
அத்துடன், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் திட்டம், தூய இலங்கைத் திட்டம், கிராமிய வறுமை ஒழிப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் போன்ற திட்டங்களுக்கு தாம் நிதியுதவியை வழங்குவோம் என்றும் உலக வங்கியின் பிரதானிகள் வாக்குறுதி வழங்கியுள்ளனர். (அ-ம-44)

## வடக்கு...

விவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வெளிநாடுகளில் சுமார் 3 மில்லியன் புலம்பெயர் தமிழர்கள் உள்ளனர். அவர்களில் பலர் மேற்குலக நாடுகளில் வெற்றிகரமாக வியாபாரம் செய்து வருகின்றனர். இலங்கைக்கு வந்து முதலீடுகளை மேற்கொள்வதற்கு அவர்கள் தயாராக உள்ளனர். அதற்குக் களம் அமைத்துக்கொடுக்க நாம் தயார்.
வடமாகாணத்தில் ஐந்து புதிய முதலீட்டு வலயங்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்குரிய ஆரம்பகட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன. விரைவில் முதலீட்டு வலயங்களுக்கான பணிகள் முழுமை பெறும். அதன் பின்னர் வெளிநாடுகளில் உள்ள முதலீட்டாளர்கள் முதலீட்டுச் சபைகள் ஊடாக தமது முதலீடுகளை மேற்கொள்ளமுடியும். அதற்குப் பின்னர் முதலீட்டாளர்கள் எவரும் அரசியல்வாதிகளுக்குப் பின்னால் செல்லவேண்டிய அவசியம் இல்லை.
புலம்பெயர் இலங்கையர்கள் முதலிடுவதற்கு அனைத்து வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன. இந்த விடயத்தில் எந்தவொரு அரசியல் தலையீடும் இருக்காது. புலம்பெயர் இலங்கையர்களின் முதலீடுகளுக்கு முழுமையான உத்தரவாதம் வழங்கப்படும் - என்றார். (அ-ம-44)

## சிறீதரனுக்கு...

நாடாளுமன்றத்தில் நேற்று சிறீதரன் எம்.பி. சிறப்புரிமைப் பிரச்சினையை எழுப்பிய பின்னர், அதற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் ரத்னாயக்க இவ்வாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள் விமான நிலையத்தில் இடம்பெற்றதால், விமான நிலையத் தலைவரிடம் அது தொடர்பில் அறிக்கை கோரப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஆராயுமாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கும் தெரியப்படுத்தியுள்ளேன். சிறீதரன் எம்.பிக்கு ஏற்பட்ட இடையூறு தொடர்பில் வருந்துகின்றேன். இந்த விடயத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் சிறப்புரிமையைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-ம-44)

## ஜனவரி...

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## என்னை...

விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமைப் பிரச்சினையொன்றை எழுப்பிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-
தமிழக அரசின் ஏற்பாட்டில் சென்னையில் ஜனவரி 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் நடைபெற்ற அயலக தமிழர் தின நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பங்கேற்பதற்கு ஜனவரி 10ஆம் திகதி விமான நிலையம் சென்றிருந்தேன். இதன்போது எனது கடவுச்சீட்டில் குறைபாடு இருப்பதாகவும், பயங்கரவாத குற்றத்தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரின் விசாரணைகளுக்கு என்னை உட்படுத்த வேண்டும் எனவும் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். எனக்குப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டனர். என்னுடன் இணைந்து பயணிக்க விமான நிலையம் வந்திருந்த சக நாடாளுமன்ற உறுப்பினரான முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக நீண்டநேர விசாரணைகளின் பின்னர் இறுதி நேரத்தில் இந்தியப் பயணத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது.
நான் மீண்டும் நாடு திரும்பியபோது பயணத்தடை தொடர்பில் வினவி இருந்தேன். அவ்வாறு எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டிருந்தனர். நீதிமன்ற கட்டளைகள் எதுவுமின்றி, சபாநாயகரின் ஆலோசனையும் இன்றி எனக்குப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது என அதிகாரிகள் கூறியமையானது திட்டமிட்ட அடிப்படையில் எனது சிறப்புரிமையை மீறும் செயலாகும். இதன் பின்னணி தொடர்பில் ஆராயப்பட வேண்டும்.
கடந்த இரு நாள்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் தனியார் ஊடகமொன்றுக்கு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுமந்திரன் செவ்வி வழங்கியிருந்தார். 'கனடாவில் இருந்து வருகின்ற தடை செய்யப்பட்ட ஓர் அமைப்புடன் பேசுவதற்கு சிறீதரன் முனைந்ததாகவும், அதற்காகவே அவர் சென்னை செல்ல விருந்தாகவும், அந்த காரணத்துக்காகவே சிறீதரன் விமான நிலையத்தில் தடுக்கப்பட்டிருக்கலாம். இது தொடர்பில் சிறீதரன் எனக்குத் தெரிவிக்கவில்லை' என்றவாறாக அந்தப் பேட்டியில் சுமந்திரன் தெரிவித்திருந்தார்.
சென்னையில் என்னைச் சந்தித்தபோது கூட இது பற்றி சுமந்திரன் என்னிடம் எதுவும் கேட்கவில்லை. இப்படியிருக்கையில், 'ஊடகங்களில் தகவல்கள் வந்திருந்தன. ஆதலால், ஊகத்தின் அடிப்படையில் சிறீதரனை அவர்கள் தடுத்திருக்கலாம்' எனவும் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.
எனவே, சுமந்திரனை நீங்கள் (சிறப்புரிமைக்குழு) விசாரித்தால் எந்தெந்த ஊடகங்களில் இந்தச் செய்தி வெளிவந்தது என்பதை அறிந்து, அந்த ஊடகங்களின் பிரதானிகளை அழைத்து விசாரிப்பதன்மூலம் உண்மையைக் கண்டறிய முடியும் என நான் நம்புகின்றேன்.
வடக்கு மாகாணசபையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஓர் உறுப்பினராக இருந்த அயூப் அஸ்மின், ஜனவரி 10ஆம் திகதி தனது பேஸ்புக் பக்கத்தில் செய்தியொன்றை வெளியிட்டிருந்தார்.
கடந்த நாள்களில் விமான நிலையத்தில் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இடையூறு ஏற்படுத்தப்படவில்லை எனவும், அவ்வாறு பரப்பப்படும் செய்திகளில் உண்மை எதுவும் இல்லை எனவும் அயூப் அஸ்மின் குறிப்பிட்டுள்ளார். இந்தச் செய்தியுடன் சீமானுடன் நான் நிற்கும் படத்தையும் அவர் வெளியிட்டுள்ளார். அஸ்மினும், சுமந்திரனும் நெருங்கிய நண்பர்கள். சுமந்திரன் வெளியிட்ட செய்திக்கும், அஸ்மினின் பதிவுக்கும் இடையில் ஏதோவொரு தொடர்பு இருப்பதுபோல் எனக்கு தெரிகின்றது.
சீமானுக்கும், ஸ்டாலினுக்கும் நல்ல உறவு இல்லை. எனவே, அந்தப் படத்தை பதிவேற்றியதன் மூலம் என்னை அங்கு போகவிடாமல் தடுப்பதற்குரிய முயற்சியை மேற்கொண்டுள்ளதாகவே நான் அறிகின்றேன். எனவே, இது தொடர்பில் அதிகமாக கவனமெடுத்து விசாரிக்க வேண்டும் - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடை வாடகைக்கு

யாழ். நகருக்கு அருகாமையில்
R. Church அருகில்)
கடை (10' x 67')
வாடகைக்கு உண்டு.

**077 757 0400**

(CS/57293) J-1

## ஒப்பந்தகாரர்கள் தேவை

பழைய வீடு உடைப்பதற்கும், உடைபாடுகளை அகற்றுவதற்கும் ஒப்பந்தகாரர்கள் தேவை.

**077 7961 620**

(cs.57276) N-1

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, Champion Lane - நந்தாவிலில் புத்தம் புதிய வீடு விற்பனைக்கு.

- 2, 3/4 பரப்பு
- 4 அறைகள், 2 குளியலறைகள்
- சுற்றுமதில்
- காணி பிரிக்கக்கூடிய நிலையில் உள்ளது
- நல்ல தண்ணீர்
- கட்டுக் கிணறும் உண்டு.

தொடர்பு:- **076 620 7597**

(CS/57285) J-1

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- கொத்து, ரைஸ் போடுபவர்
- உணவு பொதி கட்டுபவர்
- உணவு பரிமாறுபவர்

**077 407 8235**

(CS/57287) J-1



# சீனா அரசாங்கத்தால் 10 பில்லியன் டொலர்

கொழும்பு, ஜன. 22

சீனா இலங்கைக்கு 10 பில்லியன் டொலரை வழங்க முன்வந்துள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. ஜனாதிபதியின் சீன விஜயத்தின்போது சீன முதலீட்டாளர்கள் இலங்கையில் பத்து பில்லியன் டொலரை முதலீடு செய்ய சம்மதித்துள்ளார்கள் என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைத் திட்டத்திற்கு சீனா வழங்கவுள்ள 3.7 பில்லியன் டொலரும் இதில் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-22,6)

# 'பஞ்சவர்ணம்' விற்பனைக்கூடம் யாழ்ப்பாணத்தில் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ்ப்பாணம் முயற்சியாளர் சங்கத்தின் ஏற்பாட்டில், வடமாகாணத் தொழிற்துறைத் திணைக்களத்தின் அனுசரணையில் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான 'பஞ்சவர்ணம்' புதிய விற்பனைக்கூடம் யாழ்.நகரில்நேற்றுமுன்தினம்திங்கட்கிழமைதிறந்துவைக்கப்பட்டது. சங்கத்தின் தலைவி திருமதி கவிதா சந்திரகுமாரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், வட மாகாணப் பிரதம செயலாளர் இ.இளங்கோவன், வட மாகாண மகளிர் விவகாரம், சமூக சேவைகள், கூட்டுறவு அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன், வடமாகாணத் தொழிற்துறைத் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம், யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன், யாழ். மாநகரசபையின் ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வடமாகாண உதவிப் பணிப்பாளர் கே. தனோஜன், யாழ்.மாவட்டச்செயலக சிறுதொழில் முயற்சிப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் தி.தனஞ்சயன், யாழ்.மாவட்ட விதாதா அலுவலர் திருமதி கோமதி மாயகிருஷ்ணா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ச-25,66)

# மரண அறிவித்தல்



## திருமதி கணபதிப்பிள்ளை இராஜபூபதி

பிறப்பு 20.12.1949 — இறப்பு 19.01.2025

அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 15/37, மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராஜபூபதி அவர்கள் கடந்த 19.01.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - பார்வதி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (கனகலிங்கம்) அவர்களின் அன்பு மனைவியும், லோகித மோகன், இளவேந்தன், சாந்தினி, சசிகரன், சுகந்தினி, அமுதினி, சிவாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற நவரட்ணராஜா மற்றும் செல்வராஜா, தவராஜா, ஆனந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சோதியம்மா, பரமானந்தம் மற்றும் கனகசோதி, சரஸ்வதி, சந்திரமகிழேஸ்வரி, கலாநிதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுதானந்தராஜா அவர்களின் பாசமிகு சிறிய தாயாரும், இராஜேஸ்வரி, சந்திரப்பிரியா, சுகந்தினி, ஜெயானந்தன், புஸ்பராணி, சசிக்குமார், பகீரதன், ஜமுனா ஆகியோரின் அன்பு மாமியும், கனிமொழி, சங்கவி, அபிராம், ஆருதி, அனுஷ்கா, ஜெனிஸ்கா, சாகித்யன், விஜங்கா, அபிகேஷன், அகிம்சன், அஸ்விகன், வைஷ்ணவி, ஆரபி, நிலாணி, ஜசானி, பிரவீன், அருவின், பிரவியா, அஜீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

15/37, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.
077 1185 116

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/2330) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org